# தேவனை அணுகும்விதம்

# THE APPROACH TO GOD

(தெய்வீக அணுகு முறை)

55-0123A

(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# தேவனை அணுகும்விதம்

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன். வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1955–ம் வருடம், ஜனவரி மாதம், 23ம் தேதி, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்காவில் அளிக்கப்பட்டது. ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து அச்சிடப்பட்ட ஆங்கில புத்தகத்திலிருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

*வெளியிடப்பட்டது: செப்டம்பர் 2018*

# தேவனை அணுகும்விதம்

## (THE APPROACH TO GOD)

### ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், ஜனவரி 23, 1955, பிலதெல்பியா சபை, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

*யாவும் கூடும், விசுவாசிக்க மாத்திரம் செய்,*

*விசுவாசிக்க மாத்திரம் செய், விசுவாசிக்க மாத்திரம் செய்,*

*யாவும் கூடும், விசுவாசிக்க மாத்திரம் செய்.*

நாம் ஜெபிப்போம். பிதாவே, நீர் எங்களை ஆரோக்கியத்தோடு வைத்து, இந்தப் பிற்பகல் வேளையில் உம்முடைய நேச குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இங்கே வெளியில் ஒன்றாகக் கூடி வரும்படிக்கு கிடைத்த சிலாக்கியத்திற்காகவும், நீர் எங்களை ஆசீர்வதித்திருக்கிற நன்மைகளுக்காகவும், உமது குமாரனாகிய இயேசுவின் நாமத்தில், நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். பிதாவே, எங்கள் ஒவ்வொருவருக்கும் ஜீவ அப்பத்தைப் பிட்டுத்தாரும். பரிசுத்த ஆவியானவர் வந்து தேவனுடைய சொந்த வார்த்தையாகிய இந்த வேதாகமத்திலிருக்கும் வார்த்தைகளை எடுத்து, எங்களுடைய தேவைக்கேற்றபடி, அதை ஒவ்வொரு இருதயத்திற்கும் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம். இயேசுவின் நாமத்தில் நாங்கள் இதைக் கேட்கிறோம். ஆமென். உங்களுக்கு நன்றி. நீங்கள் உட்காரலாம்.

2. மதிய வணக்கம், நண்பர்களே. இன்று, இந்தப் பிற்பகல் வேளையில் இங்கே இருப்பது ஒரு சிலாக்கியமாயுள்ளது, சற்று காலதாமதமாகி விட்டது, ஆனால் இந்த நேரத்தில், அது என்னுடைய தவறல்ல. அது அந்த பணியாளரின் தவறு. நான் வாக்குக் கொடுத்தபடி இரண்டரை மணிக்கே இங்கு இருந்தேன். ஆனால் இந்நேரத்தில் காலதாமதம் செய்தவர்கள் அவர்கள் தான், அது என்னை ஒருவிதத்தில் நன்றாக உணரும்படி செய்கிறது, அது உங்களுக்குத் தெரியும், நான் காலதாமதமாக வருவதாக அவர்கள் எப்போதுமே என்னிடம் கூறுகிறார்கள். நீங்கள் எங்கே இருந்தீர்கள்? நீங்கள் துரிதமாக இருப்பது ஏன்? இப்பொழுது, இந்நேரத்தில், தாமதமாய் இருப்பவர்கள் அவர்கள் தான். எனவே அது சரியாகத் திரும்பி வருகிறது.

சகோதரன் உட் அவர்கள் சபைக்குள் இருப்பாரானால், அவரை எங்குமே என்னால் காண முடியவில்லை. ஆனால் சகோதரன் உட் இங்கே இருப்பாரானால், சகோதரன் உட் அவர்களே, உம்மை பின்பகுதியில் வைத்து சந்திக்கும்படி பில்லி விரும்புகிறான். என்னால் இங்கே அவரைக் காண முடியவில்லை, ஒலிப்பதிவு செய்பவர்கள் இருக்குமிடம் (recorder's pit) இதோ உள்ளது, தம்முடைய மனைவியோடு அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும் அவரை என்னால் காண முடியவில்லையே, ஆனால் நான் அப்படியே... நம்முடைய புத்தக விற்பனையாளராகிய சகோதரன் உட், சகோதரன் பாங்ஸ் உட் அவர்கள் இங்கு எங்காகிலும் இருப்பாரென்றால், இங்கிருந்து புறப்பட்டு செல்ல ஆயத்தமாகும்படியாக, புத்தகங்களையும் காரியங்களையும் வண்டியில் ஏற்றுவதைக் குறித்து, பின்பகுதியில் உங்களைச் சந்திக்கும்படி பில்லிபால் விரும்புகிறான்.

3. இப்பொழுது, நாம் கொஞ்சம் தாமதமாகி இராவிட்டால், ஒருக்கால், பிரதான ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கைக் குறித்துள்ள ஒரு பாடத்தின் பேரில் இந்தப் பிற்பகல் வேளையில் நான் நினைப்பூட்டப் போவதாக இருந்தேன், நான் அவ்வாறு தான் நினைத்திருந்தேன். ஆனால் இப்பொழுதோ நமக்கு மிக அதிக

நேரம் கிடையாது, நமக்கு அதிகபட்ச நேரமாக நாற்பது நிமிடங்களுக்கு மேல் இல்லை என்று நினைக்கிறேன், நாம் பாடத்தை மாற்றப் போகிறோம்.

எனவே நாம் இங்கே வாசிக்கும்படியாக வேறொரு - வேறொரு வேதவாக்கியத்தை முயற்சிப்போம். பிறகு, இன்றிரவு... நான் இவ்விதமான ஒரு கூட்டத்தில், அப்படியே இந்த இடத்தை விட்டுத் தாண்டிச் செல்லும் அளவுக்கு (துரிதமாக) ஓடிச்சென்று, பிறகு ஜெப ஆராதனையை அடைய எனக்கு விருப்பமில்லை. ஏனென்றால், நாம் சிகாகோவில் எப்பொழுதுமே கண்டு வருகிற தெய்வீக சுகமளித்தலினுடைய வல்லமையின் மிகப்பெரிய ஊற்றப்படுதலை தேவன் இன்றிரவு நமக்கு அருள வேண்டுமென்று நான் விரும்பி, ஜெபித்து, தேவனையே நம்பிக் கொண்டிருக்கிறேன். இந்தக் கூட்டத்தின் நிமித்தமாக அல்ல, ஆனால் அங்கே அவ்வளவு தேவை இருக்கிற காரணத்தினால் தான்.

4. எனக்குக் கடிதங்களும் மற்றும் காரியங்களும் கிடைக்கின்றன, அவர்கள் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றனர். இன்று காலையில், பில்லி தன்னுடைய அறைகளில் வைத்து, பட்டணத்திற்கு வெளியிலிருந்து தொலைபேசி (அழைப்புகள்) தொடர்ச்சியாக ஒலித்தவண்ணம் இருந்ததாகவும், ஜனங்கள் அப்படியே, எல்லா இடங்களிலிருந்தும்... (அழைத்துக் கொண்டிருந்ததாகவும்) கூறினான். "இங்கே வாருங்கள். இங்கே வெறுமனே ஒரு நாள் இங்கு வாருங்கள், வெறும் இரண்டு மணி நேரம். நீர் உம்முடைய பாதையில் நிறுத்திக் கொள்ளலாம்" என்று அழைத்துக்கொண்டே இருக்கின்றார்கள். அங்கே அவ்வளவாக ஒரு மிகப்பெரிய தேவை உள்ளது. இங்கேயிருக்கும் ஜனங்களாகிய நீங்கள் மிகவுமாக அபிஷேகிக்கப்பட்டவர்களாய், உங்களுடைய சொந்த சமுதாயத்திற்குள் சென்று, வியாதியஸ்தர்களுக்காகவும், தேவையுள்ளவர்களுக்காகவும் ஜெபிக்கும் அளவுக்கு அவ்வளவு ஒரு ஊற்றப்படுதலை இன்றிரவு

தேவன் நமக்கு அருள வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன். அது அவ்வளவு மிகப்பெரிய தேவையாக உள்ளது.

இப்பொழுது, நம்மால் கூடிய மட்டும், துரிதமாக வார்த்தைக்குச் செல்வோம். சற்று நேரத்திற்கு முன்பு, அங்கே வெளியே காரில் உட்கார்ந்து கொண்டிருக்கையில், உள்ளே வரும்படியான அழைப்புக்காக நான் காத்துக் கொண்டிருந்தேன், அது... அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில், இதோ இந்தப் பாடத்தின் பேரில் என்னுடைய சிந்தை போனது. 65வது சங்கீதம், 4வது வசனத்தை வாசிக்கும்படியாக ஒரு சிறு வேதவாக்கியத்தை நான் கண்டுபிடித்தேன்.

5. இந்தப் பாடப்பொருளின் சுருக்கமானது (outline) அருமையாக இருப்பதாகத் தோன்றுகிறது. தாவீதுடைய... ஐ எனக்குப் பிடிக்கும். சங்கீதங்கள் பாடல்கள் மட்டுமல்ல என்றும், ஆனால் அவைகள் தீர்க்கதரிசனங்களாகவும் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். அது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்பொழுதாகிலும் 22வது சங்கீதத்தை வாசித்ததுண்டா, அங்கே இயேசு பேசின அதே வார்த்தைகள், சிலுவையில் அவருடைய கடைசி வார்த்தைகள் 22-ம் சங்கீதத்தில் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளதே? “என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? என் எலும்புகள் எல்லாம் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன...” அவருடைய நிலைமைகள் எல்லாவற்றையும் குறித்து 22ம் சங்கீதத்தில் பேசப்பட்டிருந்தது.

அங்கே கொஞ்சம் - இங்கே ஏதோவொரு விதத்தில் சத்தம் கொஞ்சம் எதிரொலிக்கிறது என்று நம்புகிறேன். நான்... ஒருக்கால், பொறியாளர் அதைக் கொஞ்சம் அதிக உயரத்தில் வைத்திருக்கலாம். மேலும்... பின்னால், நான் கூறுவதை உங்களால் சரியாக கேட்க முடிகிறதா? அங்கே மேல்மாடியில் இருக்கும் எல்லாரும், நீங்கள் நான் சொல்லுவதைக் கேட்க முடிகிறதா? என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், நான் ஒரு நாட்டுப்புறப் பையன், பால்கனியில், மேல்மாடியில் உள்ளவர்களைத்தான் சொல்லுகிறேன்.

என்னை நினைவுபடுத்துவதற்கான ஒன்றாக அது என்னுடைய மனைவிக்கு இருக்கும். சகோதரி உட் அவர்களே, நீங்கள் வீட்டிற்குப் போய்ச் சேரும்போது, புகார் தெரிவிக்க வேண்டாம். புரிகிறதா?

6. சரி, இப்பொழுது, 65-வது சங்கீதம், 4வது வசனத்தில், நம்முடைய சிந்தனைக்கு ஒரு சிறிய பின்னணிக்காக இதை வாசிப்போம். இப்பொழுது, இது இவ்விதமாக வாசிக்கப்படுகிறது:

**உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.**

இப்பொழுது, இந்த வார்த்தையின் வாசிப்புக்கு கர்த்தர் தாமே தம்முடைய ஆசீர்வாதங்களைக் கூட்டுவாராக. இப்பொழுது, இங்கே சங்கீதக்காரன், "தேவனிடம் கிட்டிச் சேரும்படி (அணுகி வரும்படி) (approach) அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மனுஷன் பாக்கியவான், அவன் அவருடைய பிராகாரங்களில் வாசமாயிருப்பான்" என்றான். தேவனண்டையில் கிட்டிச் சேரும்படியாக தேவன் தெரிந்து கொண்டிருக்கிறார். ஓ, எப்படியாக நாம்... அதைச் செய்வதற்கு நமக்கு நேரம் இருக்குமானால், பரிசுத்த ஆவியானவர் அங்கிருந்து உண்மையிலேயே சில காரியங்களைத் தோண்டி எடுக்க அவரால் கூடும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

7. இப்பொழுது கவனியுங்கள். "உம்மிடம் கிட்டிச் சேரும்படி (அணுகி வரும்படி) நீர் தெரிந்து கொண்ட மனுஷன் பாக்கியவான், அவன் (கிட்டிச் சேரும்படி (அணுகும்படி) தெரிந்து கொள்ளப்பட்டவன்) உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருப்பான், நாங்கள் உம்முடைய ஆலயத்தில் திருப்தியாவோம்."

தேவனை அணுகுதல் என்பதைக் கவனியுங்கள். கிட்டிச் சேருவதற்கு (அணுகுவதற்கு) தேவன் ஒரு வழியை வைத்திருக்கிறார். நீங்கள் ஒரு இராஜாவை சந்திக்கப் போவதாக

இருந்தால், நீங்கள் ஒரு இராஜாவை அணுகுவதற்கு ஒரு வழி இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அணுகுவதற்கு அங்கே ஒரு வழி இருக்கிறது... நல்லது, அப்பொழுது நீங்கள் அதைக் காட்டிலும் (உங்களை) அதிக எளிமையாக ஆக்கிக் கொள்ளுவீர்கள். வாலிப பெண்ணை அணுக விரும்புகிற வாலிபன், அவளோடு பழக, அங்கே-அங்கே ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை இருக்கிறது. நீங்கள் அப்படியே அங்கு வந்து, "ஏய், அங்கே இருக்கிறவளே. உன்னைச் சந்திக்கவும் உன் கரத்தைக் குலுக்கவும் விரும்புகிறேன்" என்று கூறி விட முடியாது. அவள் ஒரு பெரிய சீமாட்டி அல்ல, அவளை எங்கே வைத்து தொடர்பு கொள்ளலாம் என்றும், அங்கிருந்து போகலாம் என்றும் நீங்கள் அறியும்படிக்கு அவள் செய்வாள். சரி. அதை அணுகும்படியாக நீங்கள் விரும்புகிற ஒரு குறிப்பிட்ட வழி உண்டு. நீங்கள் அந்தப் பெண்ணிடம் மரியாதையோடு வரவும் மற்றும் காரியங்களைச் செய்யவும் விரும்புவீர்கள்.

8. எல்லாவற்றையும் அணுகுவதற்கு ஒரு வழி உண்டு. தேவனை அணுகுவதற்கும் ஒரு வழி உண்டு. தேவனை அணுகுவது (எப்படி) என்று நமக்குத் தெரியவில்லை என்றால், நாம் தேவனோடு பேசும்படியான தருணத்தை ஒருபோதும் பெற்றுக் கொள்ளவே முடியாது. பாருங்கள்? நீங்கள் அறிந்திருக்க வேண்டும்...

ஒரு நீதிமன்றத்தில்... நீங்கள் மேலே நடந்து சென்று, நீதிபதி வீற்றிருக்கையில் (on the stand), "ஏய், நீதிபதியே. நான் உன்னிடம் கொஞ்சம் பேச விரும்புகிறேன்" என்று கூற மாட்டீர்கள். (அவ்வாறு செய்வீர்களானால்), ஒழுங்கற்று நடந்து கொண்டதற்காக யாராவது ஒருவர் உங்களை நீதிமன்ற அறையை விட்டு வெளியே தள்ளி, சிறையில் அடைத்து விடுவார்கள் (பாருங்கள்?) புரிகிறதா? நீதிபதியை அணுக வேண்டுமானாலும் அதற்கு ஒரு வழி உண்டு.

மகத்தான, தெய்வீக நியாயாதிபதியை அணுகும் வழியை நாம் கண்டுபிடித்தாக வேண்டும், அவர் தேவன் தாமே.

ஒரு காலத்தில் மனிதன் தூத கணங்கள் (angelic Beings) வழியாக ஒருக்கால் மகத்தான பரலோக இராஜாவின் மகத்துவத்தின் பிரசன்னத்திற்கு முன்பாக வந்த போது, அவன் அநேகமாக வேறொரு வழியில் அணுகினான். ஆனால் பாவமானது தொடர்பை பிரித்து விட்டது முதற்கொண்டு... இப்பொழுது அந்தத் தொடர்பானது...

9. இப்பொழுது, ஒரு மனிதன் ஒரு குமாரனாக ஆகும்போது, அவன் தன்னுடைய தகப்பனை அணுகப் போவதாக இருந்தால், அவன் அப்படியே தகப்பனிடம் நடந்து சென்று, “அப்பா, நான்-நான் ஒரு காரியத்தைக் குறித்து உம்மைக் காணும்படியாக, உம்மைச் சந்திக்க வந்திருக்கிறேன்” என்று கூறுகிறான். அதுதான் அவனுடைய அணுகுமுறை. ஆனால் இப்பொழுது, அந்நியரிடம் (பேச வேண்டுமானால்), அதற்கு வேறொரு அணுகுமுறை உள்ளது. உங்களுக்குப் புரிகிறதா?

அநேக வெவ்வெறான காரியங்களுக்கு தேவனிடம் ஒரு அணுகுமுறை இருக்கிறது. இப்பொழுது, என்னுடைய அப்பா உயிரோடிருந்து, ஒரு பொருளாதார காரியத்தினிமித்தமாக அவரை அணுக விரும்பி, அவரிடம் போவதாக இருந்தால், அது வேறு விதமான அணுகுமுறையிலிருந்து சற்று வித்தியாசமாக இருக்கும். நான் அவரைக் குறித்து எவ்வளவாக நினைத்துக் கொண்டிருந்தேன் என்றும், மற்ற காரியங்களையும் அவரிடம் கூற விரும்புவேன். அந்த அணுகுமுறையைத் தான் நீங்கள் தேவனை சந்திக்கவும் பயன்படுத்த வேண்டும்.

10. இப்பொழுது, மனிதன் முற்காலத்தில் ஆதியிலே ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்த போது, அவன் தன்னைத்தானே பிரித்துக் கொண்டு, தேவனிடம் கிட்டிச் சேரும்படியான (அணுகும்படியான) எல்லா அணுகுமுறைகளை விட்டும் அவனுடைய முற்றிலுமான ஜீவ கயிறை (lifeline) விட்டும் தன்னைத் தானே துண்டித்துக் கொண்டான். தன்னுடைய சிருஷ்டிகரை விட்டு அவன் பிரிக்கப்பட்டான், அவரை எப்பொழுதாவது மீண்டும் சந்திப்பதற்கு எந்த வழியுமே

இல்லாதிருந்தது. ஏனென்றால் அவனுடைய பாவம், தேவனை நம்புவதில் அவனுக்கிருந்த அவிசுவாசம் அவனை வேறுபிரித்திருந்தது.

அங்கே ஒரே ஒரு பாவம் தான் உண்டு, அதுதான் அவிசுவாசமாகிய உங்களுடைய பாவமாகும். அவிசுவாசம் தான் உங்கள் பாவமாகும். நாம் இருக்க வேண்டிய ஸ்தானத்தில் நாம் இன்று இல்லாததற்கு ஒரே காரணம் என்னவென்றால், அது நம்முடைய அவிசுவாசத்தின் நிமித்தமாகத்தான். அது - அதுதான் அதைச் செய்கிறது. சபையில் அற்புதங்களும் காரியங்களும் அவைகள் இருக்க வேண்டிய பிரகாரமாக இல்லாததற்குக் காரணம் என்னவென்றால், அவிசுவாசம் நம்மைப் பிரித்து வைத்திருக்கிறதன் நிமித்தமாகத்தான்.

11. அங்கே வெளியிலிருக்கும் அந்தப் பரிதாபமான மனிதன் பாவம் செய்கிறவனாகவும், கொலை செய்கிறவனாகவும் இருப்பதற்கும், இன்றைய பயனற்ற நம்முடைய உலக காரியங்களும், எல்லாவிதமான நாசகார காரியங்களும் சம்பவிப்பதற்கும் காரணம் என்னவென்றால், தேவனை அவிசுவாசிக்கிற காரணத்தினால் தான். அவ்வளவு தான். நாம் விசுவாசிப்போமானால், அங்கே வெறுமனே இரண்டு காரியங்கள் தான் உண்டு; நீங்கள் விசுவாசிக்க வேண்டும், அல்லது விசுவாசிக்காமல் இருக்க வேண்டும், இரண்டில் ஒன்று.

நீங்கள் விசுவாசிப்பீர்களானால், நீதியின் கிரியைகள் ஒரு விசுவாசியைப் பின்தொடருகின்றன. நீங்கள் விசுவாசிக்காவிட்டால், அநீதியின் கிரியைகள் பின்தொடருகின்றன. ஒரே காரியம் என்னவென்றால், அது... பொய் சொல்லுதல், திருடுதல், களவு செய்தல், மேலும் மற்ற காரியங்கள் அவிசுவாசத்தின் தன்மைகள் ஆகும். நீடிய சாந்தமும், பொறுமையும், நற்குணமும், இரக்கங்களும், மேலும் அதைப் போன்றவைகளும் தேவனிடத்திலுள்ள விசுவாசத்தின் தன்மைகளாகும், தேவனிடத்திலுள்ள விசுவாசம்.

இப்பொழுது, ஆனால் மனிதன்... இல்லாமல் துண்டிக்கப்பட்ட போது. அணுகும்படியாக எந்த வழியுமே இல்லாதிருந்தது, அவனுடைய ஒரே ஜீவ கயிறும், எல்லாமுமே துண்டிக்கப்பட்டு விட்டன. அவன் சிருஷ்டிகரை அணுகுவதற்கு ஒருபோதும் எந்த வழியுமே இல்லாதவனாய், நம்பிக்கையற்றவனாய், அந்தகாரத்தில் விடப்பட்டான்.

12. அதன்பிறகு, தேவன் இறங்கி வந்து, மனிதனைத் தேடிக் கொண்டிருந்த போது, நீங்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எப்பொழுதுமே தேவன் தான் மனிதனைத் தேடுகிறார், மனிதன் தேவனைத் தேடுவதில்லை. நீங்கள் எப்பொழுதாவது அதைக் குறித்து சிந்தித்துப் பார்த்ததுண்டா? எந்த மனிதனும் எந்த நேரத்திலோ அல்லது எக்காலத்திலும், தேவனை சேவிக்க வேண்டும் என்ற வாஞ்சை அவனுக்குள் ஒருபோதும் இருந்ததே கிடையாது: அவன் அவ்வாறு ஒருக்காலும் இருந்ததில்லை. அவனுடைய சுபாவம் அதற்கு விரோதமாகவே இருக்கிறது.

இப்பொழுது, அவன் ஒருக்கால் ஏதோவொரு விதமான அறிவு சார்ந்த சிந்தனைகளைக் கொண்டிருக்கலாம், அவன்-அவன், தான் தேவனை விசுவாசிப்பதாக நினைத்துக் கொள்கிறான், ஆனால் அவன் உண்மையாகவே, நிஜமாகவே தேவனை விசுவாசிக்கும் போது, அவன் தேவனை விசுவாசித்த உடனே, அவன் மனந்திரும்பி, ஒரு புது சிருஷ்டியாக ஆகி விடுகிறான். அவன்-அவன் ஒருக்கால் தேவனை அறிவு சம்பந்தமாக விசுவாசிக்கலாம், ஆனால் அவன் தன்னுடைய இருதயத்திலிருந்து விசுவாசிக்கும் போது, அவன் மனந்திரும்பி கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒரு-ஒரு-ஒரு அங்கத்தினனாக ஆகி விடுகிறான். அவன் தன்னுடைய இருதயத்திலிருந்து மனந்திரும்பும் போது, அவனுடைய புத்திசாலித்தனங்களைக் கொண்டல்ல... இப்பொழுது...

13. ஆனால் மனிதன் ஒருபோதும் தேவனைத் தேடுவதில்லை; தேவன் தான் மனிதனைத் தேடுகிறார். தேவன், அவருடைய சுபாவம் பரிசுத்தமும் உயர்ந்ததுமாயிருக்கிறது. மனிதன் விழுந்து

போய் கீழான இழிநிலையிலும், கீழ்த்தரமான நிலையிலும் இருக்கிறான். தேவனற்ற ஒரு மனிதன் ஒருபோதும் சரியான மனநிலையில் இருக்க மாட்டான் (நான் இதையும் கூட கூறியாக வேண்டும் என்று நினைக்கிறேன், இல்லையா?). அது முற்றிலும் உண்மை. என்னால் அதை நிரூபிக்க முடியும். தேவனற்ற ஒரு மனிதன் ஒரு மிருகத்தைக் காட்டிலும் மேலானவனல்ல. இப்பொழுது, இது மிகவும் ஆழமாகத் தொனிக்கலாம், ஆனால் என்னால் அதை உங்களுக்கு நிரூபிக்க முடியும்.

நமக்கு இன்று ஒரு நாகரீகம் இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாக மட்டுமே. இயேசு கிறிஸ்துவினுடைய மார்க்கம் உங்களை பைத்தியக்காரர்களாக ஓடும்படி செய்து விடும் என்று ஜனங்கள் கூறுகிறார்கள். அது உங்களுடைய சரியான மனநிலையைத் தான் (சுயபுத்தியை) உங்களுக்குக் கொடுக்கிறது. நீங்கள் அவரைக் கண்டடையும் மட்டுமாக நீங்கள் சரியாக இல்லை. அது உண்மை. இப்பொழுது, அது... சகோதரர்களே, அல்லது பண்பாளர்களே (புரிகிறதா?), சீமாட்டிகளே, நான் உங்கள் உணர்வுகளைப் புண்படுத்துவதாகக் கருதவில்லை. நான் அவ்வாறு செய்ய வேண்டும் என்று கருதவில்லை. ஆனால் உண்மையாகவே அக்காரியத்தை அது இருக்கிறவிதமாக கூறவே கருதுகிறேன், அது மிகவும் சரியே.

14. கிறிஸ்து ஒருபோதும் உங்களைப் பைத்தியம் பிடிக்கும்படி செய்யவே மாட்டார்; உங்களுக்கு பைத்தியம் பிடித்த பின்பு, அவர் உங்கள் (சரியான) சிந்தையை உங்களுக்குத் தருகிறார். உங்களைப் பைத்தியம் பிடிக்க வைப்பது பிசாசு தான். அது ஒரு பிசாசு.

கதரா தேசத்தைச் சேர்ந்த பைத்தியக்காரனைப் பாருங்கள். புரிகிறதா? அவன் இயேசுவைச் சந்தித்த போது, அவனுடைய சிந்தை பழைய நிலைக்குத் திரும்பியது, அவனுடைய சரியான மனநிலைக்குத் திரும்பியது. தன்னுடைய சரியான மனநிலையில் இல்லாத ஒரு மனிதன், அவன் எவ்வளவு புத்திசாலித்தனத்தை உடையவனாய் இருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல,

அப்படியிருப்பினும் அவன் இன்னுமாக பைத்தியமாகத் தான் இருக்கிறான். கிறிஸ்துவை அறியாத ஒரு மனிதன் அவன் தனக்குள்ளே ஒரு மிருகத்தைக் காட்டிலும் மேலான எதுவுமாக இல்லை, அது கடினமாகத் தான் இருக்கிறது. அவன்... கட்டுங்கடங்காத உணர்ச்சிகளுக்காகவும், சிற்றின்ப இச்சைகளுக்காகவும், அவன் ஒரு தாயின் கரங்களிலிருக்கிற குழந்தையை தூக்கி வெளியே எறிந்து விட்டு, அவளை கற்பழிக்கிறான், அதற்குக் காரணம் அவனுடைய மிருகத்தனமான இச்சையினிமித்தமாகத்தான். அது உண்மை. நிச்சயமாக அவன் அவ்வாறு செய்வான்.

15. அவன் தான் ஒரு புத்திசாலி என்றும், படித்தவன் என்றும் நினைத்துக் கொண்டு, மதுபான விஷங்களையும் காரியங்களையும், புகையிலைகளையும் அவனுக்கு விஷமாயிருக்கிற காரியங்களையும் தன்னுடைய சரீரத்திற்குள் எடுத்துக் கொண்டு தன்னைக் கொன்று போடுகிறான். பாருங்கள்? அவனுக்கு எந்த வித்தியாசமும் தெரிவதில்லை. நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும். அதன்பிறகு, நீங்கள் அந்த மனிதனுக்கு முட்டாளாகி விடுகிறீர்கள். ஆனால் தேவனுடைய பார்வையில் நீங்கள் பாக்கியவான்களாக ஆகி விடுகிறீர்கள்.

16. உலகம் அதைக் குறித்து எதையாகிலும் கூற எவ்வளவு முயற்சித்தாலும், அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் அப்போது மரணத்தை விட்டு ஜீவனுக்குட்பட்டு விட்டீர்கள் என்று உங்களுக்குத் தெரியும், ஏனென்றால் கிறிஸ்து மூலமாக ஜீவனானது உங்களுடைய அழிவுக்குரிய சரீரத்தில் ஆளுகை செய்கிறது.

எனவே அது... இதைப் போன்று இருக்கிறது. ஒரு பன்றியையும் ஆட்டுக்குட்டியையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஆட்டுக்குட்டியானது பன்றியைப் பார்த்து, "ஓ, ஒரு பன்றியாக இருப்பது நிச்சயமாகவே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. அந்தச் சாக்கடையில் (slop) நீ புரண்டு கொண்டிருக்கிறதையும், அவ்விதமாக நீ செய்கிற எல்லாவற்றையும் பார்" என்று கூறுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

அந்த பன்றியால் அந்த ஆட்டுக் குட்டியிடம் மறுமொழி கூற முடியுமானால், "பழங்கால பையனே, உன்னுடைய சொந்த வேலையைப் பார். எனக்கு என்ன தேவை என்று எனக்குத் தெரியும். அது உன்னுடைய வேலை அல்ல" என்று கூறி விடும். பாருங்கள், ஒரு ஆட்டுக்குட்டியாக வேண்டும் என்ற விருப்பமே அதற்குக் கிடையாது, ஏனென்றால் அதனுடைய சுபாவமே ஒரு பன்றியாகத்தான் இருக்கிறது. இப்பொழுது, அந்த சேற்றை (slop) விட்டு நீங்கள் அதை வெளியே கொண்டு வருவதற்கு ஒரே வழி என்னவென்றால், அதைக் கழுவி சுத்தம் செய்வதல்ல, இல்லை, இல்லை, ஆனால் அதனுடைய சுபாவத்தை மாற்றுவது தான். நீங்கள் அதனுடைய சுபாவத்தை மாற்றும் போது, நீங்கள் அதைக் கழுவ வேண்டியதில்லை, அது தானாகவே கழுவப்பட்டு விடும், அதனுடைய சுபாவம் மாற்றப்படுமானால். அது சரி தானா? நிச்சயமாக.

17. எனவே மினுக்கு மினுக்கிக் கொண்டு, சபையைச் சேர்ந்து கொள்ளுதலும், நிறைய வாசிப்பதும், நிறைய புத்தங்களையும், ஆக்கியோன்களையும், மற்றவைகளையும் அறிந்து கொள்வதும் நீங்கள் மனந்திரும்பி விட்டீர்கள் என்பதற்கு அர்த்தமல்ல. ஏனென்றால் நீங்கள் அறிவு சம்பந்தமான சிந்தையைக் கொண்டிருந்து, எங்கேயோ ஒரு தேவன் இருக்கிறார் என்ற மன ரீதியிலான ஒரு கருத்தை உங்களுக்கு ஏற்படுத்தி விடுகிறீர்கள், உங்கள் இருதயத்தையும் சுபாவத்தையும் மாற்றுகிற கிறிஸ்துவோடு உண்மையிலேயே நீங்கள் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளும் மட்டுமாக, நீங்கள் இன்னும் ஒரு கிறிஸ்தவனல்ல. அப்போதுதான் நீங்கள் தேவனுடைய பிள்ளையாக ஆகிறீர்கள். பழையவைகள் ஒழிந்து போயின, மறுபடியும் எல்லாம் புதிதாயின.

இப்பொழுது, நீங்கள் கவனிப்பீர்களானால், தேவன், அப்போது... மனிதன் அணுகும்படியாக எந்த வழியுமே இல்லை, எனவே அது தேவனுடைய இரக்கமாக இருக்க வேண்டியதாய் இருந்தது. அது தேவன் மனிதனை அழைப்பதாக இருந்தது. "ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?"

18. இப்பொழுது, இன்றும் அதே காரியம் தான், மனிதனை முதலாவது தேவன் அழைத்தாலொழிய, அவனால் கிறிஸ்துவிடம் வர முடியாது. புரிகிறதா? அவனுடைய சுபாவம். நீங்கள் எப்பொழுதாகிலும் ஏதாவது சுபாவத்தை உடையவர்களாயிருந்து, நீங்கள் தேவனிடம் வருவதைக் குறித்துள்ள எந்தக் காரியத்தைப் பற்றிய எந்த சிந்தனையையாவது கொண்டிருந்தீர்களானால், தேவன் தான் உங்களோடு இடைப்பட்டுக் கொண்டிருக்கிறார். அது உண்மை. ஏனென்றால் இயேசு, "... விட்டால், ஒருவனும் பிதாவினிடத்தில் வர முடியாது, அல்லது என்னிடத்தில் வர முடியாது" என்றார். கிறிஸ்துவின் மூலமாகவே அன்றி நாம் தேவனிடம் வர முடியாது. அது சரியா? முதலாவது பரிசுத்த ஆவியானவர் நம்மை அழைத்தாக வேண்டும் அல்லது நாம் ஒருக்காலும் அதைக் குறித்த எதையும் சிந்திக்கவே மாட்டோம். அது அப்படியே தான் இருக்கும் - நாம் சரியாக அப்படியே தொடர்ந்து சென்று, உலகக் காரியங்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்போம். "நல்லது, சபை எல்லாம் சரிதான். அது சரி என்று நிச்சயமாகவே நான் நம்புகிறேன்." ஆனால் ஒரு உண்மையான தொடுதல் என்பது, தேவன் தான் அதைச் செய்ய வேண்டும்.

19. இப்பொழுது, அணுகும்படியாக தேவன் ஆதாமுக்கு உண்டுபண்ணின வழியானது... இப்பொழுது, கவனியுங்கள். ஆதாம் தனக்குத் தானே ஒரு அணுகுமுறையை (approach) உண்டாக்கிக் கொண்டான். அவன், "இப்பொழுது நான் வெளியே சென்று தேவனைச் சந்திக்க வேண்டும்" என்றான். எனவே அவன் தன்னுடைய வெட்கத்தை மூடி மறைக்கும்படியாக தனக்குத்தானே அத்தி இலைகளினால் ஒரு வஸ்திரத்தை உண்டாக்கிக் கொண்டான். தேவன் அந்த அணுகுமுறையைப் புறக்கணித்து விட்டதை அவன் கண்டு கொண்டான்.

இன்று, மனிதன், "இப்பொழுது, இங்கேயிருக்கும் திருமதி ஜோன்ஸ் அவர்களுக்கு நான் உதவி செய்வேன்; அவள் ஒரு விதவை; அவளுக்கு கொஞ்சம் நிலக்கரி தேவைப்படுகிறது.

என்னுடைய பெரும் செல்வத்திலிருந்து நான் செஞ்சிலுவை சங்கத்தினருக்கு (Red Cross), அல்லது ஏதாவதொரு தொண்டு நிறுவனத்திற்குக் கொடுப்பேன். நான் சபையைச் சேர்ந்து கொள்வேன்" என்று நினைத்துக் கொள்வான் என்றால். அப்பொழுது தேவன் புறக்கணித்துத் தள்ளுகிற ஒரு அணுகுமுறையை உங்களுக்கு நீங்களே உண்டாக்கிக் கொள்ள மாத்திரமே செய்கிறீர்கள். அங்கே ஒரே ஒரு அணுகுமுறை (approach) தான் உண்டு. வழியாக... தேவனிடம்.

இப்பொழுது, ஆதாமுடைய அணுகுமுறையை தேவன் புறக்கணித்து தள்ளி விட்டார். பிறகு, தேவன் சென்று, ஆதாமுக்கு ஒரு அணுகுமுறையை உண்டு பண்ணினார். அவர் ஆதாமுக்கு ஒரு அணுகுமுறையை உண்டாக்கினார். அதைச் செய்வதன் மூலமாக, அவர் ஏதோவொரு செம்மறி ஆடு அல்லது ஏதோவொன்றைக் கொன்று அவைகளிலிருந்து கொஞ்சம் தோல்களைப் பெற்றுக் கொண்டார். உலகத்திலே பாவத்திற்காக முதலாவது தேவனிடம் இருந்த அணுகுமுறையானது இரத்தத்தின் வழியாகவே கொண்டு வரப்பட்டது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பில்லை. அது சரியே. இரத்தம் மாத்திரமே வழியை உண்டாக்க முடியும்.

20. தேவன் அங்கே ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கு ஒரு அணுகுமுறையை அருளினார், அவரைச் சரியாக அணுக வேண்டுமானால், அது குற்றமற்ற இரத்தத்தை சிந்துவதன் மூலமாகவே தான். அப்படியானால் ஆதாம் சிந்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாகவே, மீண்டுமாக தேவனை அணுகி முகமுகமாக பேசும்படியாக, ஒருமுறை கூட வர முடிந்தது, இரத்தத்தின் மூலமாகவே - அதன் வழியாகவே, தேவன் அவனுக்கு அருளின அணுகுமுறையின் வழியாகவே.

இப்பொழுது, ஜனங்களுக்காக தேவன் தமக்குத் தாமே கொண்டிருந்த தேவனுடைய முதலாவது அணுகுமுறை அதுவாகத்தான் இருந்தது, அது சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாகவே. அந்த நாள் தொடங்கி இன்று வரை அதே காரியம்

தான் இருந்து வருகிறது. இரத்தம் சிந்துதல் வழியாகத்தான், அதுதான் தேவனோடுள்ள அணுமுறையைக் கொண்டு வருகிறது.

இப்பொழுது, தேவன் அநேக நேரங்களில் அடையாளங்கள், சின்னங்கள் மேலும் அதைப் போன்ற அப்படிப்பட்டவைகளைக் கொடுத்து, அந்த இரத்தத்தண்டை வரும்படியான ஒரு வழியை உண்டுபண்ணுகிறார். இப்பொழுது, உதாரணமாக, நாம் யோபுவை எடுத்துக் கொள்வோம்.

21. வேதாகமத்திலேயே மிகப் பழமையான புத்தகமாக யோபுவின் புஸ்தகம் இருக்கிறது... வயதான மனிதனாகிய யோபு... அவனுடைய வீட்டில் பேரழிவு வருவதற்கு சற்று முன்பு, அவன் ஒருவிதமாக கவலை கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு கூட்டம் பிள்ளைகள் இருந்தார்கள், அவர்கள் உலகப்பிரகாரமாக வெளியிலே போய்க் கொண்டிருந்து, உலகத்தின் காரியங்களுடன் சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

அது எப்படிப்பட்ட ஒரு உணர்ச்சியாக இருக்கும் என்று பெற்றோர்களாகிய நம் எல்லாருக்கும் தெரியும். உங்களுடைய பிள்ளைகள், உங்களுடைய அதே இருதயம், உலகத்தோடு சேரத் துவங்கும் போது, அவிசுவாசிகள் மத்தியில் வெளியே போய் விடுகிறார்கள். பில்லி இந்நேரத்தில் இங்கே இருக்கிறான் என்று நான் நினைக்கவில்லை; அவன் ஒருக்கால் சகோதரன் உட் அவர்களோடு வெளியிலிருந்து பேசிக் கொண்டிருக்கிறான் என்று நினைக்கிறேன். ஆனால் எங்கள் பட்டணத்தில், எங்களுக்கு ஒரு கிறிஸ்தவ பள்ளியும் கிடையாது. அங்கே ஒரு கூட்டம் உலகப்பிரகாரமான பிள்ளைகளும், சிறு பெண்களும், பையன்களும் கூட இருக்கிறார்கள். என்னுடைய மகனை அந்தப் பள்ளிக்கு அனுப்புவதைக் குறித்து நான் எண்ணிப் பார்த்த போது, நான் அவனுக்கு பயிற்றுவித்திருந்த ஒவ்வொரு காரியத்தையும் அறிந்திருந்தேன். அவன் உண்மையாகவே மனமாற்றம் அடைந்து, உண்மையாகவே, கிறிஸ்துவிடம் வராவிட்டால், அதாவது, அவனுடைய சுபாவங்கள் எல்லாம் மாறி விடும், அவன் இந்த உலகப்பிரகாரமான கூட்டத்தோடு சேர்ந்து கொண்ட உடனே,

என்னுடைய கைகளின் கீழிருந்து அவன் விலகிச் சென்று விட்டான். ஏனென்றால் அவன் ஒரு நல்ல பையனாயிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, அவனுக்குள் இருக்கும் அதே சுபாவமானது, அது... (கிரியை) செய்வதில்லை. அவனுக்கு ஒரு ஊழியக்கார தகப்பனார் உண்டு, அவனுக்கு ஒரு பக்தியான வீடும் உள்ளது, அங்கு நாங்கள் எங்கள் வீட்டில் உலகப்பிரகாரமான எந்தக் காரியத்தையும் அனுமதிப்பதில்லை... கிறிஸ்தவர்கள் ஜீவிக்க வேண்டியது போல, நாங்கள் தேவனுடைய கிருபையினால் ஜீவிக்கவே முயற்சி செய்கிறோம், அந்த செல்வாக்கு (தாக்கம்) அவனுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவன் இழக்கப்பட்டு போயிருந்தால், அவன் நிச்சயமாகவே இழக்கப்பட்டவனாய் ஒரு நீதியான வீட்டை நோக்கி நடந்து வந்து விடுவான் என்பதை நான் அறிந்திருந்தேன். அவன் என்னுடைய ஜீவியத்தோடு நடந்து வர வேண்டுமென்று தான் நான் விரும்புகிறேன். அவன் வேதாகமத்தோடு நடக்க வேண்டும். அவன் கிறிஸ்துவின் இரத்தத்தோடு நடக்க வேண்டும். ஏனென்றால் தேவனுடைய கிருபையினால், நான் நிச்சயமாகவே அவனுக்கு முன்பாக அதைக் காண்பிப்பேன்.

22. ஆனால் அவனுடைய சுபாவம் மாறியிராவிட்டால், அவன் அப்படியே அதேவிதமாகவே தொடர்ந்து செய்வான். பில்லி உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்த அந்த நாளைக் குறித்து நான் எவ்வளவாக எண்ணிப் பார்க்கிறேன். நான், "ஓ, என்னே" என்று எப்படியாக எண்ணினேன். அவன் இன்னும்... என்பதை அறிந்திருந்தேன். அவன் கொண்டிருந்தான், ஓ, அவன் ஞானஸ்நானம் பெற்றவனாயிருந்தான், நிச்சயமாக, ஆனால் அவன் கிறிஸ்துவுக்கு முழுமையாக ஒப்புவிக்கவுமில்லை, அர்ப்பணிக்கவுமில்லை. ஒரு பிள்ளைக்குரிய சுபாவம் இன்னும் அவனுக்குள் இருந்தது என்பதை அறிந்து கொண்டு, என்னுடைய இருதயம் எவ்வளவாய் அவனுக்காக ஏங்கினது, நான் எவ்வளவாக ஜெபித்தேன், என்னுடைய காரில் வெளியே சென்று சுற்றிலும் பிரயாணம் செய்து, "தேவனே, எனது மகன் அங்கே வெளியிலுள்ள அந்த விதமான காரியத்தோடு தொடர்பு வைத்துக்

கொள்ள நீர் அனுமதிக்க வேண்டாம்" என்று கூறுவேன். நான் எப்படியாக, "தேவனே, நான்-நான் நம்புகிறேன், நான் ஜெபிக்கிறேன், அவனுடைய தாய் மரித்து விட்டாள், நானே அவனுக்கு தகப்பனாகவும் தாயாகவும் இருந்து வருகிறேன். எனவே தயவுசெய்து அவன் அங்கே வெளியில் இருப்பவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு, அவன் தொல்லையில் சிக்கிக் கொள்ள அனுமதிக்க வேண்டாம். ஏதாவதொரு வழியில் நீர் அவனைப் பாதுகாத்துக் கொள்வீரா?" என்று கூறினேன்.

23. ஓ, இந்தப் பிற்பகல் வேளையில், எனக்கு நேரம் இருக்குமானால், தேவன் எப்படியாக பில்லியின் வழிக்குக் குறுக்கே மீண்டும் மீண்டுமாக சிகப்பு விளக்கை வைத்தார் என்பதை விளக்கிக் கூற பல மணி நேரங்கள் பிடிக்கும். ஆம், ஐயா. நான் அவனை... கண்டிருக்கிறேன். இங்கே சமீபத்தில், நான் நியூஆல்பெனியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன், குழந்தையினுடைய (அவளுடைய) பற்கள் எல்லாம் முளைத்துக் கொண்டிருந்தன, பள்ளியிலுள்ள சிறு பிள்ளை அவளுடைய பற்களை உடைத்து விட்டது. அதன்பிறகு, பில்லி வெளியே மீன் பிடித்துக் கொண்டிருந்து விட்டு, உள்ளே நுழைந்தான், அப்போது அவனுக்கு மோசமான ஜலதோசம் அல்லது ஏதோவொன்று ஏற்பட்டிருந்தது. நான் சில ஊழியக்காரர்களோடு இருந்தேன், நாங்கள் நியூஆல்பெனியில் அமர்ந்திருந்தோம். சிறிய மகளுடைய பற்களைச் சரி செய்யும்படியாக மனைவி அவளுடன் போயிருந்தாள். நான்... நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த போது, ஏதோவொன்று, "காரை விட்டு வெளியே வந்து நடக்கத் துவங்கு" என்றது.

நான், "அது என்ன?" என்று நினைத்தேன். நான் வெளியே வந்து தெருவில் நடக்கத் தொடங்கினேன். பரிசுத்த ஆவியானவர் என்னை அங்கே சந்தித்து, "சீக்கிரமாக வீட்டிற்குத் திரும்பிப் போ. பில்லி மரணத்தருவாயில் இருக்கிறான்" என்றார்.

அவன் தன்னுடைய மிதிவண்டியில் மீன்பிடிக்கப் போகும்படியாக நான் அவனை விட்டு வந்திருந்தேன். நல்லது, அவன் அங்கே இறங்கிப் போனான், அவன் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, ஆற்றில் விழுந்து நனைந்து விட்டிருப்பானோ என்று நான் நினைத்தேன், அவனுக்கு மோசமான சளிப்பிடித்து, அந்த ஆற்றினருகிலேயே எதுவும் செய்யாமல் இருந்திருக்கிறான். பிறகு அவன் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குப் பதிலாக, சாம் அவர்களிடம் போய் (அவர் என்னுடைய ஒரு மருத்துவ நண்பர்), “டாக்டர், எனக்கு ஒரு பென்சிலின் ஊசி போடுங்கள். நான்... இன்று நான் நனைந்து விட்டேன். எனக்கு எந்த மோசமான சளியும் பிடிக்க எனக்கு-எனக்கு விருப்பமில்லை” என்று கேட்டுக் கொண்டான். மருத்துவர் அவனுக்கு ஒரு பென்சிலின் ஊசி போட்டார், அதற்குப் பிறகு அவன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான், அவனுடைய கால்விரல்களைச் சுற்றிலும் அவ்வளவு பெரிதாக இருந்தது, அவன் கீழே விழுந்திருந்தான்...

24. அங்கிருந்த என்னுடைய மாமியார் அவனை மிகவும் துரிதமாக அழைக்க, அவன் அங்கே ஓடிச் சென்றான், லூயிவில்லிலிருந்து ஒரு சிறப்பு மருத்துவர் அழைக்கப்பட்டார், ஆம்புலன்ஸ் அதிவேகமாக அங்கே வந்து அவனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றது, அவன் அங்கே உள்ளே படுத்திருந்தான், அவனுடைய இருதயத்தின் மேல் இரண்டு adrenalin ஊசி போட்டார்கள். அவனுடைய இருதயம் 20 முறை துடிக்க வேண்டிய நேரத்தில் பத்து முறை தான் துடித்துக் கொண்டிருந்தது. அவ்விதமாக ஏதோவொன்று. நான் அவசர அவசரமாக வீட்டிற்குச் சேன்றேன். என்னோடிருந்த அந்த ஊழியக்காரர்கள், “பில்லியை உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டனர். நான், “நீங்கள் கவனித்துப் பாருங்கள்” என்றேன். நாங்கள் வாசலுக்குள் நுழைந்தோம், அங்கே என்னுடைய மாமியார் முற்றத்தில் நின்று கொண்டு, அவர்களுடைய உச்சக்குரலில் கதறிச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள், “பில்லி

மருத்துவமனையில் மரித்துக் கொணடிருக்கிறான்" என்றார்கள். நான் அப்படியே அவர்கள் எல்லாரையும் (அங்கேயே) வெளியே விட்டு விட்டு, எவ்வளவு கூடுமோ அவ்வளவு வேகமாக, மருத்துவமனையை நோக்கிச் சென்றேன்.

25. இரண்டு நாட்களுக்கு முன்பு தான், நான், "பில்லி, நீ ஆபத்தான நிலத்தில் நடந்து கொண்டிருக்கிறாய். நீ சேர்ந்துள்ள கூட்டத்தை விட்டு வெளியில் வந்து விடு. கடந்த இரவில், ஜெபத்திற்குப் பிறகு, அங்கே அந்த அறையில் நான் நின்று கொண்டிருக்கையில், நான் படுக்கைக்குப் போகும் முன்பாக கர்த்தராகிய இயேசு எனக்கு இதைக் காண்பித்தார், நான் என்ன கூறிக் கொண்டிருந்தேனோ அதை நீ கேட்கவே செய்யாததை நான் கண்டேன். ஆனால் நீ ஒரு ஜன்னலிலிருந்து குதித்து, நீ இவ்விதமாக தலையை மேலே திருப்பி, குதிகால்களும் மேலே (எழும்பி), மேலே, மேலே ஆகாயத்தினூடாகப் போய்க் கொண்டிருப்பதை நான் கண்டேன். அந்தவிதமான கூட்டத்தோடு சுற்றுவதை நீ கட்டாயம் விட்டு விட வேண்டும்" என்றேன். நல்லது, அவனோ ஒரு பிள்ளையாக, தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான்.

26. அதன்பிறகு நான் அங்கே மருத்துவமனைக்கு விரைந்தேன், இதோ என்னுடைய சிறு டாக்டர் நண்பர், கீழே ஹாலுக்கு வந்தார், அவர் தம்முடைய தொப்பியை கீழே ஹாலில் எறிந்து விட்டு, "பில்லி, சில நிமிடங்களுக்கு முன்பு உம்முடைய மகனை ஏறக்குறைய கொன்றே விட்டேன், அப்படித்தான் நம்புகிறேன். எங்களுக்கு இங்கு இரண்டு சிறப்பு மருத்தவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் அவனுக்கு இரண்டு adrenalin ஊசிகளை... சரியாக அவனுடைய இருதயத்தின் மேல் போட்டோம். அவன் இன்னும் சுயநினைவற்றவனாகத் தான் அங்கே படுத்துக் கொண்டிருக்கிறான்" என்றார்.

27. ஒரு தகப்பனாகவும், சுவிசேஷத்தின் ஒரு ஊழியக்காரனாகவும் இருந்து, அதை நேராக்க முயற்சித்து வந்த நான், மெதுவாக நடக்கத் துவங்கினேன். நான், "சரி, டாக்டர், நீர்-நீர்

என்னுடைய நண்பர். எப்படி செய்ய வேண்டும் என்று நீர் அறிந்திருக்கிற சிறந்ததை நீர் செய்தீர்" என்று கூறினேன்.

அவர், "பில்லி, அதனால் அவனுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு விட்டதோ எனக்குத் தெரியவில்லை. நான் முன்பு அவனுக்கு அதைக் கொடுத்திருக்கிறேன் (ஊசியைப் போட்டிருக்கிறேன்). என்ன நடந்ததோ எனக்குத் தெரியவில்லை" என்று கூறினார். அவர் தமது கரங்களைத் தட்டிக் கூப்பிட்டார், ஏனென்றால் நாங்கள் அன்புக்குரிய நண்பர்களாயிருந்தோம். மேலும் அச்சிறு...

அவர் ஹாலில் இறங்கத் தொடங்கினார், நான், "டாக்டர், நான் அவனைப் பார்க்கலாமா?" என்று கேட்டேன்.

அவர், "நல்லது, நாங்கள் அவனில் ட்யூப்புகளை மாட்டி வைத்திருக்கிறோம். போங்கள்" என்றார்.

28. நான் மிக மெள்ள நழுவி உள்ளே சென்று அவன் எங்கேயிருக்கிறான் என்று கவனித்தேன்...?... நான் எனக்குப் பின்னாக கதவை கீழே இழுத்து விட்டுக் கொண்டேன், அங்கே பில்லி அப்படியே... முகம் எவ்வளவு கறுப்பாக இருக்க முடியுமோ அவ்வளவு கறுப்பாகவும், அவனுடைய கண்கள் பின்னோக்கி இருந்தன. அவர்கள் அவனுக்கு சுவாசத்தை குழாய் மூலமாக களகளவென்ற சத்தத்துடன் உட்செலுத்திக் கொண்டிருந்தார்கள், அவனுடைய மூக்கு வழியாக ஒரு குழாய் மாட்டப்பட்டிருந்தது, மற்றும் எல்லா காரியங்களும் இருந்தன. அவனுடைய நாக்கு வெளியே தள்ளிக் கொண்டிருந்தது, அவனுடைய வாய் பின்னோக்கி இழுக்கப்பட்டிருந்தது, அவனுடைய கண்கள் நிலைத்து நின்றன; அவன் எவ்வளவு கறுப்பாக இருக்கக் கூடுமோ அவ்வளவு கறுத்துப் போய் இருந்தான், நான், "அதோ அவன் இருக்கிறான்" என்று நினைத்தேன். (உடனே) முழங்கால்படியிட்டு, நான், "தேவனே, நீர் என்னுடைய ஒரே மகனை எடுத்துக் கொள்வீரா. கர்த்தாவே, நீர் அவனை எடுத்துக் கொள்வீரா, நான் அவனை என்னுடைய கரங்களில் சுமந்திருக்கிறேனே, அது முதற்கொண்டு. பிள்ளைகளைக் குறித்து நீர் புரிந்து கொள்வீர்

என்பது எனக்கு-எனக்குத் தெரியும், கர்த்தாவே. நீர் அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறேன்" என்று நினைத்தேன். எவ்வளவு அமைதியாக இருக்க முடியுமோ அவ்வளவு அமைதியாக நான் தேவனுக்கு முன்பாக இருந்தேன்.

29. என்னை இரட்சிக்கும்படியாக மரித்த, அவருடைய சொந்த குமாரனாகிய, தேவ குமாரனாகிய இயேசுவின் மூலமாக அவரிடம் கிட்டிச் சேரும்படியாக (அணுகும்படியாக), இங்கே இந்தப் பிற்பகலில் இந்தப் புனிதமான மேடைக்கு முன்பாக (நிற்கிற) என்னுடைய நியாயாதிபதியாகிய சர்வவல்லமையுள்ள தேவன்... நான் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, இதோ அந்தத் தரிசனம் மறுபடியுமாக வந்தது. அந்த தரிசனத்தில் அவன் அவ்விதமாக கீழே கீழே நோக்கி சுழன்றபடி போய்க் கொண்டிருக்கையில், அவனுடைய கால்களும் தலையும் ஆகாயத்தில் சுற்றி சுற்றி உயரே பறந்து கொண்டிருந்தது, அந்த தரிசனத்தை ஒரு சில இரவுகளுக்கு முன்பு கண்டேன். பிறகு இரண்டு கரங்கள் நீட்டப்பட்டு, இவ்விதமாக அவனைப் பிடித்து, அவனைச் சுமந்தபடி திரும்பி வரத் துவங்குவதை நான் கண்டேன். சற்று நேரத்தில், நான் மேலே நோக்கிப் பார்த்தேன்; அப்போது பில்லி உற்றுப் பார்த்து, அவன், "அப்பா, எங்கே இருக்கிறேன்... நான் எங்கே இருக்கிறேன்?" என்றான்.

நான், "எல்லாம் சரியாக இருக்கிறது, மகனே. எல்லாமே சரியாக இருக்கிறது" என்றேன்.

30. நான் அங்கே சுற்றிச் சென்றேன், டாக்டர் அங்கே நின்று கொண்டு துணை மருத்துவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அவர் அங்கிருந்து போவது வரை நான் காத்திருந்தேன். நான் டாக்டரைச் சுற்றி என்னுடைய கரத்தைப் போட்டுக் கொண்டு, நான், "டாக், எல்லாம் முடிந்து விட்டது" என்றேன்.

அவர், "அவன் சுகமாகப் போகிறான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான், “அவன் சுகமடைந்து விட்டான்” என்றேன். கிறிஸ்து... ஆமென். ஒரு அணுகுமுறையைக் குறித்து பேசுதல்.

ஆமாம், யோபு தன்னுடைய பிள்ளைகள் ஒருக்கால் தற்செயலாக பாவம் செய்திருக்கலாம் என்று ஒருவேளை நினைத்து, “அவர்கள் ஒருக்கால் பாவம் செய்திருப்பார்கள், அதைக் குறித்து எனக்கு-எனக்குத் தெரியாது” என்று கூறினான். எனவே அவன் தான் அணுக முடிந்த ஒரே ஒரு வழியை மாத்திரமே அவன் கொண்டிருந்தான். அதுதான் சர்வாங்க தகனபலியின் கீழாக இருந்தது.

31. எனவே அவன் சர்வாங்க தகன பலியை கொண்டு சென்று, தன்னுடைய பிள்ளைகளுக்காக பலி செலுத்தினான். அவன் தன்னுடைய பிள்ளைகள் எல்லாருக்காகவும் பலி செலுத்தினான், அது ஒருக்கால்... கவனியுங்கள், பாருங்கள், அவர்கள் ஒருக்கால் பாவம் செய்திருக்கலாம். ஒருக்கால் அவர்கள் யோபுவுடைய பக்கத்தில் வைத்து ஒருக்காலும் பாவம் செய்யாமல் இருந்திருக்கலாம். அவனுக்கு ஒருக்கால் அதைக் குறித்து எதுவும் தெரியாதிருக்கலாம். ஆனால் அவர்கள் வெளியே உலகத்தில் தனியாக இருந்ததை அவன் அறிந்திருந்தான்...

நான் உங்களுக்கு இதைக் கூறுகிறேன்; இன்று நமக்குத் தேவை என்னவென்றால், தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற நல்ல, பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்கள் தான் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை. நமக்கு அப்படிப்பட்ட தாய்தகப்பன்மார்கள் இருந்திருந்தால், எனக்குத் தெரிந்த இளம்பருவத்தினரின் குற்றங்களை ஒழித்துக்கட்ட அது மிகப்பெரிய உதவியாக இருக்கும். முதலாவது, தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்களை எனக்குக் கொடுங்கள்.

32. இந்தப் பிற்பகல் வேளையில், இதோ பாருங்கள், பையன்களே, சிறு பெண் பிள்ளைகளே. அதைப் போன்ற ஒரு தாயோ தகப்பனோ உங்களுக்கு இருந்து, பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் பேசிக் கொண்டிருந்து, உங்கள்

தாய்மார்களுடைய ஜெபங்களையும் மீறி நீங்கள் நடந்து கொண்டிருப்பீர்களானால், இதை ஞாபகம் கொள்ளுங்கள். நீங்கள் திரும்பி, உங்களைத் தானே கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கும் மட்டுமாக, நீங்கள் ஒருபோதும் வாழ்வடையவே மாட்டீர்கள். அது உண்மை.

இப்பொழுது, யோபு, "அவர்கள் ஒருக்கால் பாவம் செய்திருப்பார்கள்" என்றான். எனவே அவனிடம் இருந்த சிறந்ததையும், அவனுக்குத் தெரிந்த எல்லாவற்றையும் பலியாகச் செலுத்தினான், ஏனென்றால் அவன் தேவனிடம் கொண்டிருந்த அணுகுமுறை எல்லாம் அவ்வளவு தான். எனவே அவனுடைய சொந்த அணுகுமுறைக்காக அவன் ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்றான். அவனுடைய ஒரு மகனுக்காக அவன் வேறொரு ஆட்டுக்குட்டியைக் கொன்றான், வேறொரு மகனுக்காக வேறொரு ஆட்டுக்குட்டியையும் கொன்று, தேவனிடம் அணுகி வரும்படியான ஒரு வழியை உடையவனாய் இருக்கும்படியாக ஒவ்வொரு பிள்ளைகளுக்காகவும் ஒரு சர்வாங்க தகன பலியை செலுத்திக் கொண்டிருந்தான். தேவன் நேர்மையையும் உத்தமத்தையும் கண்டார்.

33. ஓ, நீங்கள், "இப்பொழுது, சகோதரன் பிரன்ஹாமே, இப்பொழுது ஒரு நிமிடம் பொறுங்கள். அது அந்த தகப்பனாரின் செல்வாக்கு (தாக்கம் அல்லது பாதிப்பு) என்று நான் நம்ப மாட்டேன்... அது ஒரு தனிப்பட்ட நபரின் விவகாரம் என்று நம்புகிறேன்" என்று கூறலாம். உண்மை தான். ஆனால் நாம் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோமே (அது உண்மை.), நம்முடைய அன்பார்ந்தவர்களுக்காக தேவனிடம் (ஜெபத்தை) ஏறெடுக்கும்படியாக கட்டளை பெற்றிருக்கிறோம், அப்பொழுது அவர் அவர்களை இரட்சிப்பார்.

இப்பொழுது, கவனியுங்கள். இவை எல்லாவற்றிலும், அவர்கள் பாவம் செய்திருப்பார்களோ என்று பாவ நிவாரண பலிகளை தேவனுக்கு செலுத்துவதில் யோபு தன்னுடைய மனதைப் பதித்திருந்தான், ஒருக்கால் அந்த அணுகுமுறையானது... நீங்கள்,

“நல்லது, அது புதிய ஏற்பாட்டிலும் கூட இருக்கிறதா?” என்று கேட்கலாம்.

ஆமாம். நிச்சயமாக அது புதிய ஏற்பாட்டிலும் கூட இருக்கிறது. நல்லது, அவர், “நான் என்னுடைய வீட்டாரை இரட்சிக்க வேண்டுமானால், நான் அவர்களை விட்டுப் போய் விட வேண்டுமா?” என்று கேட்டார்.

34. அப்படி எனில், நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டியதில்லை. நான் சரியாக அங்கேயே தங்கியிருப்பேன். பவுல் பிலிப்பு பட்டணத்து சிறைச்சாலைக்காரனிடம், “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்” என்றான். அது உண்மை. பரிசுத்தமாக்கப்பட்ட மனைவி கணவனைப் பரிசுத்தமாக்குகிறாள். ஒரு கிறிஸ்தவனைப் போல ஜீவியம் செய்யுங்கள். ஒரு கிறிஸ்தவனைப் போல இருங்கள். எல்லா நேரமும் ஜெபம் செய்யுங்கள். தேவன் இருக்கிறார் என்றும் அவர் உங்கள் ஜெபத்திற்கு பதிலளிக்கப் போகிறார் என்றும் விசுவாசியுங்கள். அருளப்பட்ட அணுகுமுறை மூலமாக அதைச் செலுத்துங்கள்.

35. யோபு அந்தவிதமாகத்தான் செய்தான்; அவனிடம் ஒரு அணுகுமுறை இருந்தது; அது சர்வாங்க தகன பலியின் (burnt offering) வழியாகத்தான் இருந்தது. எனவே அவன் ஒரு சர்வாங்க தகன பலியை எடுத்து, வெளியே சென்று, அதை பலி செலுத்தி, அவனுடைய பிள்ளைகளின் பொருட்டு தேவனை அணுகினான். உங்களுக்கு அது புரிகிறதா? அவன் ஒரு அணுகுமுறையை கொண்டிருந்தான். எனவே தன்னுடைய பிள்ளைகளின் பொருட்டு அந்த அணுகுமுறையை உபயோகித்தான். “இப்பொழுது, தேவனே, இதோ நான் இந்த ஆட்டுக்குட்டியோடு வருகிறேன், நான் இதை ஜானுக்காக செலுத்திக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது, கர்த்தாவே, அவன் பாவம் செய்திருப்பானானால், நீர் அவனை மன்னிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.” பாருங்கள்? பாருங்கள்? சர்வாங்க தகன ஆட்டுக்குட்டியின் (burnt lamb)

அணுகுமுறையின் வழியாக, ஏனென்றால் அவன் அணுக வேண்டியதாய் இருந்த ஒரே காரியம் அதுதான்.

36. இப்பொழுது, நீங்கள் எப்பொழுதாகிலும் கவனித்திருப்பீர்களானால், அந்தத் திடீர் பேராபத்து எப்படியாக யோபுடைய வீட்டைத் தாக்கி, அந்த பிள்ளைகள் எல்லாரும் கொல்லப்பட்டு, மற்றும் எல்லா காரியமும் சம்பவித்த போது... யோபுவுக்கு இருந்த எல்லாமும் அழிந்து போய் விட்டன. தேவன் யோபுவைக் கடிந்து கொள்ளவில்லை. அவர் யோபுவை சுத்தப்படுத்த (purging) மாத்திரமே செய்தார். ஆமென். சுத்தப்படுத்துதல் (purge) என்ற அந்த வார்த்தை எனக்குப் பிடிக்கும்.

கனிகொடுக்கும் கிளை, பிறகு தேவன் அதைச் சுத்தப்படுத்துகிறார், அப்பொழுது அது இன்னும் அதிக கனிகளைக் கொடுக்கும். அதைக் குறித்த தொல்லை என்னவென்றால், தேவன் நம்மிடம் கோபமாக இருப்பதாக சிலசமயங்களில் நாம் எண்ணிக் கொள்கிறோம். ஆனால் அவர் நம்மை சுத்தப்படுத்துவதற்கு மாத்திரமே முயற்சிக்கிறார். அப்பொழுதுதான் நாம் மிகுதியான கனிகளைக் கொடுப்போம், அவர் நமக்கு ஒரு சில சோதனைகளைக் கொடுக்கிறார். அது உங்களுக்கு விலையேறப்பெற்ற பொன்னைப் பார்க்கிலும் அதிக விலைமதிப்பு மிக்கதாக இருப்பதாக வேதாகமம் கூறுகிறது.

37. தேவனிடம் வருகிற ஒவ்வொரு புத்திரனும் நிச்சயமாக முதலில் - முதலாவது உபத்திரவத்திற்குள்ளாக்கப்பட்டு, சாட்டையால் அடிக்கப்பட்டு (whipped), பிள்ளையைக் கண்டிப்பது போல கண்டித்து திருத்தப்பட வேண்டும் என்பதை நீங்கள் எப்பொழுதாகிலும் எண்ணிப்பார்த்ததுண்டா? அது எளிதான காரியமல்ல. தேவன் உங்களுக்கு கசையடிகளைக் கொடுக்கும்போதும், நீங்கள் இங்கே வெளியே சென்று, "நல்லது, நான் கொஞ்சம் சுற்றியுள்ளவர்களோடு சேர்ந்து கொள்வேன்" என்று கூறுகிறீர்கள். அப்போது அதற்காக தேவன் உங்களுக்கு ஒரு உண்மையான பழைமை நாகரீகமான அடியைக் (spanking)

கொடுப்பார். இன்று இயற்கையாகவே அந்த அடிகளில் அநேகமானவை நமக்குக் கிடைத்ததால் தான், நமக்கு மிகச் சிறந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன். தேவன் தம்முடைய வீட்டாரை ஒழுங்குபடுத்த (சரிப்படுத்த) விரும்புகிறார். எனவே அவர் ஒரு சிறு கசையடியை உங்களுக்குக் கொடுக்கிறார், எனவே நீங்கள் சரியாக முடிந்து, நீங்கள் இன்னும் அதிகமாக அவரை நேசிக்கும்படி செய்கிறார்.

வழக்கமாக என்னுடைய தகப்பனார் என்னை பிரம்பினால் அடிக்கும் போது, "ஓ, என்னே" என்று நினைத்தேன். இன்றைக்கு வேறொரு தேசத்திலிருந்து, என்னுடைய தகப்பனாரை, தலை நரைத்திருந்த வயதான சகோதரனை திரும்ப அழைக்கலாமா என்று வாஞ்சித்தேன். அவர் எப்பொழுதாகிலும் எனக்குக் கொடுத்த ஒவ்வொரு பிரம்படிக்கும் நான் மரியாதை கொடுப்பேன். எனக்கு எவ்வளவு அடி தேவையாயிருந்ததோ அவ்வளவு அடிகளைக் கூட நான் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. எனவே அப்போது நான் அவ்வாறு தான் எண்ணினேன், ஆனால் இப்பொழுது அவ்வாறு நான் நினைக்கவில்லை, ஏனென்றால் அது என்னைத் திருத்தினது. அவர் தாமே அதைச் சரியாக செய்யாத போதிலும் கூட நான் சரியாக இருக்க வேண்டும் என்றே அவர் விரும்பினார். ஆமென்.

38. நாமும் சரியாக இருக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். பூமிக்குரிய பெற்றோர்கள் நமக்கு நலமானதைச் செய்ய விரும்புவார்களானால், நம்முடைய பரலோகப் பிதாவாகிய கர்த்தராகிய இயேசுவைக் குறித்து என்ன? அவர் நம்மைத் திருத்த வேண்டியவராய் இருக்கிறார். "நம்மால் சிட்சையையோ, அல்லது ஒரு கசையடியையோ, ஒரு பிள்ளைக்குரிய திருத்துதலையோ சகிக்க முடியாவிட்டால், நாம் வேசிப்பிள்ளைகளாக ஆகி விடுகிறோம், நாம் தேவனுடைய பிள்ளைகள் அல்ல" என்று வேதவாக்கியம் கூறுகிறது. புரிகிறதா?

நீங்கள் உண்மையாகவே மறுபடியும் பிறந்திருப்பீர்களானால், இப்பொழுதே அதைப் பெற்றுக் கொள்ளுங்கள், நீங்கள்

மெய்யாகவே மறுபடியும் பிறந்திருந்தால், எதுவுமே தேவனிடமிருந்து உங்களைப் பிரிக்க முடியாது. அது உண்மை. “பட்டினியோ, நாசமோசங்களோ, சோதனைகளோ, வருத்தமோ, மரணமோ, எதுவுமோ கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாது.”

நீங்கள், “நல்லது, நான் ஒரு காலத்தில் ஒரு கிறிஸ்தவனாக இருக்கத் தொடங்கினேன். அப்போது ஒவ்வொன்றும் இந்தவிதமாகவும் அந்தவிதமாகவும் போகத் தொடங்கினது, நான், ‘என்னே, நான் தூரமாய் இருக்கிற மற்ற வழியில் (போவது) எனக்கு நன்றாய் இருந்தது’ என்று நினைத்தேன்” என்று கூறலாம். அப்படியானால் சகோதரனே, நீங்கள் ஒருபோதும் தேவனிடம் வரவேயில்லை. நீங்கள் உண்மையிலேயே தேவனிடம் எப்பொழுதாவது வந்து, தேவனுடைய பரலோக ஈவுகளை (gifts) ருசிபார்த்து, அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்கு கொள்வீர்களானால், ஏன், தானிய கதிர்மணியின் தண்டு, வேண்டாத களைச் செடியாக ஆக முடிவதைக் காட்டிலும், உங்களால் மறுபடியும் அதற்கு மேலும் ஒரு பாவியாகவோ, அவிசுவாசியாகவோ ஆகவே முடியாது.

39. அது உங்கள் சுபாவமாக உள்ளது. நீங்கள் உருவாக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் சரியாக அணுகுமுறையில் வந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய சொந்த அணுகுமுறையில் வருகிறீர்கள். நீங்கள் ஒருமுறை தேவனுடைய அருளப்பட்ட அணுகுமுறையில் வந்து, என்ன நடக்கிறது என்று பாருங்கள். ஆமாம்.

யோபு அங்கேயிருந்த ஒவ்வொரு - ஒரே அருளப்பட்ட அணுகுமுறையான சர்வாங்க தகனபலியினூடாக தன்னுடைய பிள்ளைகளைக் கொண்டு சென்றான். இப்பொழுது, நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிற ஒரு சிறிய காரியம் இதோ இருக்கிறது. எல்லா குழப்பங்களும் மற்றும் யாவும் முடிந்த பிறகு, அதன்பிறகு, தேவன் அவனுடைய ஆடுகள் எல்லாவற்றையும், கால்நடைகள் எல்லாவற்றையும், குதிரைகள்

எல்லாவற்றையும், மற்றும் காரியங்களையும் எடுத்திருந்தார், பிறகு, அவனுடைய சிட்சையின் முடிவிலே, அல்லது சுத்தப்படுத்தி (purging) முடிந்து, தேவன் அவனுக்கு இரட்டத்தனையாகக் கொடுத்தார்.

அவனிடம் 10,000 கால்நடைகள் இருந்திருக்குமானால், தேவன் அவனுக்கு 20,000 கால்நடைகளைக் கொடுத்தார். பாருங்கள்? ஓ, அது அற்புதமாக இல்லையா? யோபுவை ஆசீர்வதிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே தேவன் யோபுவை சுத்தப்படுத்தினார் (purged).

40. நீங்கள், "சகோதரன் பிரன்ஹாமே, நான் ஒரு கிறிஸ்தவன், நான் இப்பொழுது வியாதிப்பட்டுள்ளேன். அது ஏன் வந்தது என்று வியப்பாயுள்ளது" என்று கூறலாம். தேவன் ஒருக்கால் உங்களை சுத்தப்படுத்திக் கொண்டிருக்கலாம் (ஆமென்.), உங்களுக்கு சில சோதனைகளைக் கொடுத்து, அவரிடம் கொஞ்சம் நெருங்கி வரும்படியாக உங்களை இழுத்துக் கொண்டிருக்கலாம், கொஞ்ச நேரம் ஜெபியுங்கள், அப்போது அவர் உங்களை சுகப்படுத்துவார், நீங்கள் ஒரு சாட்சியைக் கொண்டிருக்கலாம்.

கிறிஸ்து உங்களைச் சுகமாக்குகிறார். நீங்கள், "நல்லது, அவர் மற்றவர்களைச் சுகமாக்கினதாகக் கேள்விப்பட்டேன்" என்று கூறலாம். அப்படியானால் நீங்கள் ஒரு - நீங்கள் ஒரு... அப்படியானால் புருஷனுக்குக் கனிகளில் பங்குண்டு. அது புரிகிறதா?

41. நான் நானாக இருந்த போது, அது மிகவும் கடினமாக இருந்தது என்று எண்ணிக் கொண்டேன். அது நானாக இருந்திருந்தால், நான் தோல்வி அடைந்திருப்பேன். ஆனால் அது எனக்குள்ளிருக்கிற ஏதோவொன்று, நான் அதைக் காத்துக் கொள்வதில்லை, அதுதான் என்னைக் காத்துக் கொள்கிறது. நான் நிலைத்திருப்பேனா மாட்டேனா என்பதா கேள்வி, அவர் தாங்கி நின்றாரா இல்லையா என்பது தான் கேள்வி. அவர் தாங்கி நின்றிருப்பாரென்றால், நான் நிச்சயமாகவே அங்கே இருக்கிறேன்.

என்னால் அதைச் செய்ய முடிகிறதா முடியவில்லையா என்பதல்ல கேள்வி, அவர் அதைச் செய்தாரா இல்லையா என்பது தான் கேள்வி. அவர் அதைச் செய்தார் என்று நான் விசுவாசிக்கிறேன். அது அதைத் தீர்த்து வைக்கிறது. ஆமென்.

42. அது என்னுடைய இருதயத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது, அது இருக்கிறது என்று நான் தேவனை நம்புகிறேன், நான் என்னவெல்லாம் செய்கிறேன் என்பதல்ல, அது அல்லவே; அது அவர் என்ன செய்திருக்கிறார் என்பதாகும்.

நீங்கள், "நல்லது, அப்படியானால்... அதைக் குறித்து என்ன. நீங்கள் சென்று பாவம் செய்து கொள்ளலாம் என்று அது அனுமதி அளிக்கிறதா?" என்று கேட்கலாம். இல்லை, சகோதரனே, நிச்சயமாக இல்லை. அது என்ன செய்கிறது? நீங்கள் பாவம் செய்து, வெளியே (சென்று) தொடர்ந்து அதைச் செய்து கொண்டிருந்தால், நாம் பாவம் என்று அழைக்கிறவைகளையும், குடிப்பதையும், தவறான காரியங்களையும் தொடர்ந்து செய்து கொண்டிருப்பீர்களானால். அப்படியானால், முதற்கண் உங்கள் இருதயமே சரியாயில்லை என்பதை அது காட்டுகிறது. அது இங்கிருந்து தான் வந்தாக வேண்டும். பிறகு நீங்கள் அந்தவிதமாக வரும்போது, தேவனுடைய வழியானது... கவனியுங்கள்.

43. அதன்பிறகு முடிவில், அந்த வழியில், அவனுடைய எல்லா பிள்ளைகளுக்காகவும், தேவனிடம் அணுகி வரும்படியான இந்த அருளப்பட்ட வழிகளில் நியமிக்கப்பட்டிருந்த எல்லாவற்றையும் யோபு செய்த பிறகு, அவன் தன்னுடைய பிள்ளைகளுக்காக அணுகி அவர்கள் நிமித்தமாக ஜெபித்துக் கொண்டிருந்தான். நீங்கள் எப்பொழுதாவது கவனித்துப் பார்ப்பீர்களானால், பாதையின் முடிவில், யோபு இரட்டிப்பாக திரும்பப் பெற்றுக் கொண்டான். அவனிடமிருந்ததை, அவனிடமிருந்து எடுத்துக் கொண்டதை (purged), தேவன் அவனுக்கு இரட்டிப்பாகக் கொடுத்தார், அவனுக்குத் திரும்ப அளித்தார்.

44. அவனுக்கு 10,000 கால்நடைகள் இருந்தன, அவன் 20,000 கால்நடைகளைப் பெற்றுக் கொண்டான். அவனுக்கு 10,000 ஆடுகள் இருந்தன, அவனுக்கு 20,000 ஆடுகள் கிடைத்தன. அவனுக்கு 30,000 வெள்ளாடுகள் இருந்திருக்குமானால், ஏன், அவனுக்கு-அவனுக்கு 60,000 வெள்ளாடுகள் கிடைத்தன: தேவன் அவனுக்கு இரட்டத்தனையாகக் (கொடுத்தார்). அதன்பிறகு மீண்டுமாக, அவனுக்கு ஏழு பிள்ளைகள் இருந்தார்கள் என்று நம்புகிறேன். தேவன் அவனுக்கு ஏழு பிள்ளைகளைத் திரும்பக் கொடுத்தார். நீங்கள் எப்பொழுதாவது அதைக் கவனித்திருக்கிறீர்களா? அவர் ஒருபோதும் அவனுடைய பிள்ளைகளை இரட்டிப்பாக்கவில்லை, அவர் வெறுமனே அவனுடைய பிள்ளைகளை அவனுக்குத் திரும்பக் கொடுத்தார். ஆமென்.

ஏன், அவர் ஏன் அவ்வாறு செய்தார்? அந்த அணுகுமுறையான சர்வாங்க தகனபலியின் மூலமாகவே. அது உண்மை. ஆம், ஐயா.

அவர்கள் எல்லாரும் மகிமையில் இருந்து, அவன் வருவதற்காக காத்துக் கொண்டிருந்தனர். யோபுவுடைய பிள்ளைகள் மரித்த பிறகு, தேவன் யோபுவுக்கு அவனுடைய பிள்ளைகளைத் திரும்பவும் கொடுத்தார். அவர் ஒருபோதும் அவனுக்குத் திருப்பிக் கொடுத்து, அவனுக்கு 14 பிள்ளைகளாக ஆக்கவில்லை. அவன் தன்னுடைய மிருகங்களையும் மற்றவைகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டான், ஆனால் அவன் தனக்குத் திரும்பப் பெற்றுக் கொண்டான். காரணம் என்ன? அவன் சர்வாங்க தகனபலியின் வழியாக அணுகும்படியான தேவனுடைய அருளப்பட்ட வழியில் அவன் இருந்தான். அதுதான் அணுகுமுறை.

45. ஆபிரகாம், அவன் வயது சென்றவனான போது, கல்தேயா தேசத்தில், ஊர் என்ற பட்டணத்திலிருந்து வந்து, பரதேசியாயிருந்தான். தேவன் அவனுடைய ஜனங்களை விட்டும், அவனுக்குப் பழக்கமான எல்லாரை விட்டும் அவனை வேறு

பிரித்தார், அவனுடைய அன்பார்ந்தவர்களை விட்டு அவனைத் தூரமாய் பிரித்து, அவனையும் சாராளையும் தேவன் அந்நிய தேசத்திற்கும், அந்நிய ஜனங்களிடத்திற்கும், ஒரு பரதேசியாய் இருக்கும்படி அனுப்பினார். நீங்கள் ஒரு பரதேசியாய் இருக்கிறீர்கள் என்பதற்காக உங்களுக்கு சந்தோஷமாக இல்லையா?

46. ஒரு பரதேசி, ஒரு யாத்திரிகன். ஆமென். ஒரு பரதேசி (sojourner) என்பவன் அனுப்பப்பட்ட ஒருவனாகும். வேறு வார்த்தைகளில் கூறினால், ஆபிரகாம் ஒரு மிஷனரியாகவோ, அல்லது ஒரு அப்போஸ்தலனாகவோ இருந்தான். அவன் தேவனாலே ஒரு அந்நிய தேசத்திற்கு அனுப்பப்பட்டிருந்தான். "அப்போஸ்தலன்" என்ற வார்த்தைக்கு "அனுப்பப்பட்டவன்" என்று அர்த்தம், மிஷனரி என்ற வார்த்தைக்கும் அதே அர்த்தம்தான்.

அவன் அத்தேசத்தில், மற்றவர்களிடமிருந்து வித்தியாசமான ஒருவனாக இருந்தான். எனவே அவன் ஒரு அப்போஸ்தலனாகவும், யாத்திரிகனாகவும், ஒரு பரதேசியாகவும் இருந்தான். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பலியின் வழியாக தேவனிடம் வருகிற ஒவ்வொரு விசுவாசியும் அந்தவிதமாகத்தான் இருக்கிறான், அவன் தான் வசித்த இடங்களை விட்டு வெளியே அழைக்கப்பட்டிருக்கிறான்.

பெண்களாகிய நீங்கள், உங்களுடைய சீட்டு விளையாட்டு விருந்துகள் (card parties), இரவு நடனங்கள், உங்களுடைய போக்கிரித்தனங்கள், உங்களுடைய குடிவெறிகள் எல்லாவற்றை விட்டும், மனிதர்களாகிய நீங்களும், உங்களுடைய பாவம், ஆகிய அந்த காரியங்களை விட்டு தேவன் உங்களைப் பிரித்தெடுத்து, உங்களை என்னவாக இருக்கும்படி வெளியே அழைக்கிறார்? ஒரு அப்போஸ்தலனாக இருக்கும்படி. அந்தப் பொது ஜனங்களை விட்டோ, அல்லது அந்தக் கூட்டத்தை விட்டோ தூரமாக இருக்கும் ஒரு வித்தியாசமான வகைப்பட்ட ஜனங்களிடம்

அனுப்பினார்... என்னவாக இருக்கும்படி? உலகத்திற்கு ஒரு யாத்திரிகனாகவும் அந்நியனாகவும் இருக்கும்படியாகவே.

47. ஓ, அந்தப் பழைய பாடல் எனக்குப் பிடிக்கும். நாங்கள் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, அவர்கள் எப்போதுமே அதைப் பாடுவார்கள்:

*நாம் இங்கு அந்நியரும் யாத்திரிகர்களுமாயிருக்கிறோம்,*

*நாம் வரப்போகும் நகரத்தை நாடுகிறோம்.*

*இந்த விலையுயர்ந்த கற்களை சேகரித்து வீட்டிற்குக் கொண்டு வர,*

*ஜீவக்கப்பல் விரைவில் வரும்.*

ஓ, நான் அப்படியே அந்தப் பழைய பாடலை விரும்புகிறேன். நாம் அதைத் தொடர்ந்து பாடும்போது, தண்ணீர் சிதறி தெறிப்பது போன்ற சத்தத்தை ஏறக்குறைய என்னால் கேட்க முடிகிறது.

1933ம் ஆண்டு, ஜூன் மாதத்தில், ஸ்பிரிங் தெருவின் கீழ்ப்பகுதியிலிருக்கும் ஓஹியோ நதியில், ஒரு வாலிப பாப்டிஸ்டு ஊழியக்காரனாக, அங்கே ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, பொது ஜனங்கள் மத்தியில் நான் நின்று கொண்டிருந்த இடத்தில், என்னுடைய ஜீவியத்திலேயே முதல் தடவையாக அந்த விடிவெள்ளி நட்சத்திரமாகிய, கர்த்தருடைய தூதனானவர் முதலாவது தரிசனமான போது நாங்கள் அந்தப் பாடலைத் தான் பாடிக் கொண்டிருந்தோம்.

48. இப்பொழுது, ஆபிரகாம் ஒரு யாத்திரீகனாகவும், ஒரு அந்நியனாகவும் பரதேசியாய் சஞ்சரிக்கும்படிக்கு (sojourn) பிரிந்து வரும்படியாக அழைக்கப்பட்டான். எதனோடு அழைக்கப்பட்டான்? தேவன் அவனைக் கொண்டு உலகத்தை ஆசீர்வதிக்கப் போகிறார் என்ற வாக்குத்தத்தத்தோடு அவன் அழைக்கப்பட்டான். அவனுக்கு 75 வயதும், சாராளுக்கு 65 வயதும் இருந்த போது, அவன் வெளியே அழைக்கப்பட்டான், அவர்கள் இருவருக்கும் 10 வருட வயது வித்தியாசம் இருந்தது... அவன் தொடங்கி, 25 வருடங்கள் காத்திருந்தான், அப்பொழுதும் அவன் நம்பிக்கைக்

கொண்டவனாக, இன்னும் விசுவாசித்துக் கொண்டிருந்தான், அவன் (தன்னை) ஒரு அந்நியன் என்று அறிக்கை பண்ணி, அணுகுமுறையின் வழியாகவும் மற்றும் ஒவ்வொன்றின் வழியாகவும் தேவனிடம் வந்து, அவன் ஒரு குமாரனைக் கொண்டிருக்கப் போகிறான் என்று அப்பொழுதும் விசுவாசித்துக் கொண்டிருந்தான். அதன்பிறகு அவனுக்கு 100 வயது அல்லது 99 வயதான பிறகு, ஆதியாகமம் 15வது அதிகாரத்தில், ஆபிரகாம் இப்பொழுது 25 வருடங்களைக் கடந்து வந்திருந்தான் என்பதை நாம் கண்டு கொள்கிறோம், தேவன், அப்போது தேவன் ஆபிரகாமின் கிட்டே வந்தார்...

அவன், "இப்பொழுது, கர்த்தாவே, எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது, ஆனால் எப்படி, கர்த்தாவே? நீர் அதைச் செய்யப் போகிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனால் நீர் அதை எப்படி செய்யப் போகிறீர் என்பது எனக்குத் தெரியாது" என்றான். ஆமென். சரி. "நான்-நான்-நான்... நான் அதைச் சந்தேகிக்கவில்லை. அது கர்த்தராக இருக்கப் போகிறது. ஆனால் அது எவ்வாறு இருக்கப் போகிறது என்ற ஒரு சிறிய வழியை உம்மால் எனக்குக் காண்பிக்க முடியுமா?"

அங்கே தான் உங்களுடைய விசேஷமான சிறு ஆசீர்வாதம் வருகிறது. உங்களுக்குப் புரிகிறதா? "கர்த்தாவே, நீர் அதை எவ்வாறு செய்யப் போகிறீர்? இப்பொழுது, நானோ வயது சென்றவனாயிருக்கிறேன். நீர் அதைச் செய்யப் போகிறீர். ஆனால் நீர் அதை எவ்வாறு செய்யப் போகிறீர் என்பதை எனக்கு உம்மால் காண்பிக்க முடியுமா?" ஓ, எனக்கு அது பிடிக்கும், உங்களுக்கும் இல்லையா? "பிதாவே, நீர் அதை எவ்வாறு செய்யப் போகிறீர் என்பதை உம்மால் எனக்குக் காண்பிக்க முடியுமா?"

49. தேவன், "ஆபிரகாமே, இங்கே வா. நான் சற்று நேரம் உன்னிடம் பேச விரும்புகிறேன். ஆபிரகாமே, நான் சர்வ வல்லமையுள்ளவர், நான் சர்வவல்லமையுள்ள தேவன். எனக்கு முன்பாக நடந்து கொண்டு பரிபூரணனாயிரு. அவ்வாறு தான் நான்

அதைச் செய்யப் போகிறேன். நான் சர்வ வல்லமையுள்ளவர்" என்றார்.

50. "ஏல்..." என்ற எபிரெய வார்த்தை, "சர்வ வல்லமையுள்ள" என்பதற்கு "எல்-ஷடாய்" என்று அர்த்தம், அதற்கு "சர்வ வல்லமையுள்ளவர்" என்று அர்த்தம். அல்லது, "ஏல்" என்பதற்கு "தேவன்" என்று அர்த்தம், "ஷட்" என்பதற்கு "மார்பகம்" என்று அர்த்தம். ஷடாய் என்று பன்மையில் (plural) உள்ளது. "நான் சர்வ வல்லமையுள்ளவர், பலமுள்ளவர், எல்லாவற்றிற்கும் போதுமானவர்." உங்களுக்கு அது புரிகிறதா?

இப்பொழுது, அவர் தரிசனமான (appeared) அந்த நாமம் என்னவென்பதை ஆபிரகாம் கவனித்தான். "நான் எல் - ஷடாயாக இருக்கிறேன்." வேறு வார்த்தைகளில் கூறினால், "ஆபிரகாமே, நான் மார்பகம் கொண்ட ஒருவர் (the breasted one)." தேவன்... உண்மையில், ஷே-ட் (s-h-a-d) என்ற வார்த்தையானது... லிருந்து வருகிறது. அது வேதாகமத்தில், ஸ்திரீயினுடைய அந்த இடம், குழந்தைக்குப் பாலூட்டும் அந்த இடத்தைப் போன்று அர்த்தம் கொடுக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், "ஆபிரகாமே, நான் பலமுள்ளவர். நான் ஜீவனைக் கொடுக்கிறவர்." ஒரு ஜீவனைக் கொடுக்கிறவர் மட்டுமல்ல, குழந்தையானது (பால்) உண்பதைப் போன்று, "நான் திருப்தி அளிக்கிறவர்."

51. சிறு குழந்தையானது, அதற்கு வியாதிப்பட்டு, அதற்கு இன்னுமாக வயிற்று வலி இருந்து, அது (பால்) உண்டு கொண்டிருக்கும் என்றால், அது தன்னுடைய தாயின் கரங்களில் கிடந்து, பாலுண்ணும் மட்டுமாக, அது அதைத் திருப்தி படுத்துகிறது. ஓ, என்னே. உங்களுக்கு அது புரிகிறதா? அது ஒருக்கால் வியாதிப்பட்டிருக்கலாம், அதனுடைய சிறிய தலையை சுழற்றியபடி இருந்து, மற்ற யாவற்றையும் செய்யலாம், ஆனால் அது தன்னுடைய தாயின் மார்பகத்தில் படுத்துக் கொண்டு, பாலுண்ணுமானால், அது அக்குழந்தையை அமைதிபடுத்தி விடுகிறது.

நீங்கள் எவ்வளவு வியாதிப்பட்டிருந்தாலும், என்ன சம்பவித்திருந்தாலும், கர்த்தர் பதிலளிக்க எவ்வளவு காலம் ஆனாலும் அது காரியமில்லை, நீங்கள் அவருடைய மார்பகத்தில் படுத்து, வார்த்தையிலிருந்து இழுத்துக் கொண்டிருக்கும் காலம் வரையில், அது அந்த விசுவாசியைத் திருப்திபடுத்துகிறது.

52. "அதுதான் என்னுடைய அணுகுமுறை, அந்தவிதமாகத்தான் நீ என்னை அணுக வேண்டுமென்று நான் உன்னிடம் கேட்கிறேன். நான்-நான் உனக்குத் திருப்தியைக் கொடுக்கிறவர். நீ அதை விசுவாசிக்கிறாயா?" என்று அவர் கூறினார். அவர் அவ்வாறு கூறினார். ஆமென். "நீ என்னிடமிருந்து ஜீவனை இழுத்துக் கொண்டிருக்கையில், உன்னைத் திருப்திபடுத்துகிறவர் நானே. ஆபிரகாமே, உனக்கு நூறு வயதாகிறது, ஆனால் நீ எனக்கு வெறும் ஒரு குழந்தையாகத்தான் இருக்கிறாய்." பாருங்கள்?

நல்லது, அவன், "என்னுடைய சரீரத்தைப் பாரும், அது எப்படியாக (தோல்) சுருங்கி விட்டது. என்னுடைய தலை நரைத்துப் போய் விட்டது, என்னுடைய தோள்களோ சரிந்து விட்டன" என்றான்.

"ஆனால் நான் ஜீவனைக் கொடுக்கிறவர்." ஆமென். "அதுதான் காரியம், ஆபிரகாமே." உங்களுக்கு அது புரிகிறதா?

அப்போது ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், ஏனென்றால் அவன் ஒரு அடையாளத்தின் மூலமாகவும், ஒரு நாமத்தின் மூலமாகவும் ஒரு-ஒரு அணுகுமுறையைக் கொண்டிருந்தான்.

அவ்விதமே நாமும் இயேசு என்ற ஒரு நாமத்தின் வழியாக ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்கிறோம். இயேசு என்பது நமக்கு எதை அர்த்தப்படுத்துகிறது? இரட்சகர் என்பதை. ஆமென். ஆபிரகாமுக்கு எல்-ஷடாய், திருப்தி அளிக்கிறவர், பலமுள்ளவர், இரட்சிப்பைக் கொடுக்கிறவர், பலத்தைக் கொடுக்கிறவர், ஆபிரகாமுக்கு எல் ஷடாய் என்ற அதே காரியம் தான்,

விசுவாசிக்கு இயேசு என்பதும். ஓ, என்னே. அது அப்படியே உங்களை கிளர்ச்சியூட்டவில்லையா?

53. அது அப்படியே காரியங்களை மிகவும் அற்பமாக காணப்படும்படி ஆக்கி விடுகிறது. இங்கே பூமியிலுள்ள இந்தச் சிறு காரியங்கள். எனவே அவைகளைச் சிந்தித்துப் பார்ப்பது கூட மிகவும் வாலிபமாக இருப்பதைப் போன்றிருக்கிறது. இன்று நாம் தேவனுக்குள் மிகப் பெரிய இராட்சதப் பேராற்றல் வாய்ந்த கம்பீரமானவர்களாக இருக்க வேண்டும், சின்னஞ்சிறிய பிள்ளைகளாக அல்ல. கிறிஸ்து நம்மோடு இருந்து, நம்மை ஆசீர்வதித்து, அவரிடமிருக்கிற காரியங்களை செய்து கொண்டு, அவருடைய மகத்தான கிரியைகளை நாம் காணும் காலம் வரையில், நாம் இன்னும் குழந்தைகளே.

பவுல், "அப்போது... அந்நேரத்தில்... நாம் மாம்சத்தைக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டிய நேரத்தில், நீங்கள் இன்னும் மாமிசத்தைப் புசித்துக் கொண்டிருக்கிறீர்கள், மாமிசத்தைப் புசிக்கக் கூடியவர்களாக இல்லாமல், ஆனால் இன்னுமாக பாலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்றான். அது சரியே. இன்னும் பாலை உண்ண வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள், நீங்கள் பலமானவர்களாக இருந்து, மாமிசத்தைப் புசிக்க வேண்டிய நேரத்தில், சுவிசேஷத்தின் உத்தம பாலையே உண்ண வேண்டியதாயிருக்கிறது. புரிகிறதா?

என்னே, தேவன் செய்கிறவைகளையும், அவருடைய மகத்தான பலம்பொருந்திய கிரியைகளையும் அவருடைய வார்த்தை சரி என்று நிரூபிக்கப்படுவதையும் நாம் காணும்போது, நாம் பெரியவர்களாகவும் உறுதியானவர்களாகவும் இருக்க வேண்டும். அது உண்மை. ஏனென்று உங்களுக்குத் தெரியுமா? நாம் போதுமான அளவு புசிப்பதில்லை.

54. "இப்பொழுது, ஆபிரகாமே, நான் பலமுள்ளவரும், எல்லாவற்றிற்கும் போதுமானவருமாய் இருக்கிறேன்."

55. தானியேல் சிங்கக் கெபியில் இருந்த போது, அவர் தானியேலுக்கு எல்லாவற்றிற்கும் போதுமானவராய் இருந்தார்.

அங்கே ஒளியின் ரூபத்தில் தரிசனமாகக் கூடிய பலமுள்ள ஒருவராக அவர் இருந்தார். ஒரு சிங்கமும் அவருடைய பிரசன்னத்தை நெருங்கக் கூட முடியவில்லை.

அந்த எரிகிற அக்கினிச் சூளையில் எபிரெய பிள்ளைகளோடு இருந்த பலமுள்ளவராக அவர் இருந்தார், அந்த அக்கினித் தழலின் புகையின் மணம் கூட அவர்களை நெருங்காதபடி காத்துக்கொள்ள அவருடைய வல்லமை போதுமானதாக இருந்தது: அவரே எல்லாவற்றிற்கும் போதுமானவர். ஆமென்.

நேபுகாத்நேச்சார் இராஜா என்ன சொன்னான், அவன், “நான் நான்கு பேரைக் காண்கிறேனே. நீங்கள் மூன்று பேரை தானே உள்ளே போட்டீர்கள், நானோ நான்கு பேரைக் காண்கிறேன். ஒருவர் தேவ குமாரனுக்கு ஒப்பானவராய் காணப்படுகிறார்” என்றான், அவரே எல்லாவற்றிற்கும் போதுமானவர், அந்த அணுகுமுறை. அது புரிகிறதா? இப்பொழுது கவனியுங்கள். இதோ அவர் இருக்கிறார். அற்புதம்.

56. இப்பொழுது, ஆபிரகாமுக்கு வயதாகிக் கொண்டிருந்தது, இருப்பினும் தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணி, “ஆபிரகாமே, இப்பொழுது இதுதான் அணுகுமுறை. நீ இந்த வழியில் தான் வந்து கொண்டிருக்கிறாய், அந்த இரத்த பலியின் வழியாகவே வந்து கொண்டிருக்கிறாய். இப்பொழுது நான் குழந்தைக்கு (தாய்ப்) பாலூட்டுகிறவராகவும் (Nurser), பலத்தைக் கொடுக்கிறவராகவும், திருப்தியளிக்கிறவராகவும், பலமுள்ளவராகவும், எல்லாவற்றிற்கும் போதுமாவராகவும் இருந்து, இரத்தத்தின் பின்னால் இருக்கிறேன்” என்றார். அதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். இப்பொழுது அவன்... “நான் மார்பகம் கொண்டவர்.” ஓ, நீங்கள் அதைக் கவனித்தீர்களா? அவர் ஒருபோதும், “நான் எல் ஷட் (El Shad)” என்று கூறுவேயில்லை, ஆனால் ஷடாய் (Shaddai) என்று தான் கூறினார்: இரண்டும் (double) சேர்ந்தது (ஆமென்).

அவர் ஒருபோதும் நம்முடைய பாவங்களுக்காக மாத்திரம் மரிக்கவில்லை, ஆனால் நம்முடைய வியாதிகளுக்காகவும் அவர் மரித்தார். அவர் காயப்பட்டார். நம்முடைய அணுகுமுறையானது... நாம் யாரை அணுகி வருகிறோம்? கர்த்தராகிய இயேசுவை. அவர் எதற்காக காயப்பட்டார்? நம்முடைய மீறுதல்களினிமித்தமாக, அது ஒரு மார்பு. வேறு எதற்காக அவருக்கு தழும்புகள் உண்டானது? "அவருடைய தழும்புகளால், நாம் குணமாகிறோம்," அது மற்ற மார்பு. அவர் யார்? இருக்கிறவர், மகத்தான எல் ஷடாய், பலமுள்ளவர், எல்லாவற்றிற்கும் போதுமானவர், விசுவாசிக்கு மார்பகமுள்ள தேவன் (ஆமென், ஆமென்.) இரட்டிப்பான நிவாரணம் (cure), இரட்டிப்பான பரிகாரம் (remedy) அல்ல. மருத்துவர்களிடம் பரிகாரங்கள் உண்டு. தேவனோ நிவாரணத்தை உடையவராயிருக்கிறார். பாருங்கள்? சபையிடம் பரிகாரம் உண்டு, ஆனால் கிறிஸ்துவோ நிவாரணத்தை உடையவராயிருக்கிறார், இரட்டிப்பான நிவாரணம்.

57. அது சார்லஸ் வெஸ்லி என்று நம்புகிறேன், அவர், "இரட்டிப்பான நிவாரணமே இரட்சிக்கிறது, இல்லை, என்னைப் பரிசுத்தப்படுத்துகிறது. பாவத்திற்கான இரட்டிப்பான நிவாரணமே கோபாக்கினையிலிருந்து இரட்சித்து, என்னைப் பரிசுத்தமாக்குகிறது" என்று கூறினதில் வியப்பொன்றுமில்லை.

தேவன் எப்படியாக உங்கள் பாவத்திலிருந்தும், உங்கள் வியாதியிலிருந்தும் உங்களை இரட்சிக்க முடிகிறது: மார்பகம் கொண்டவர், எல் ஷடாய்.

இஸ்ரவேலில், அவர் அந்த அணுகுமுறையாக இருந்தார். இஸ்ரவேலர்கள் தாங்கள் மீட்கப்பட வேண்டியிருந்த ஒரு நிலைக்கு வந்த போது, தேவன் ஒரு அணுகுமுறையை அருளினார். அவரால் ஆபிரகாமைத் தெரிந்து கொள்ள கூடும் முன்பே, அவர் அந்த அணுகுமுறையை அவனுக்குக் காண்பிக்க வேண்டியிருந்தது. அந்த அக்கினி சோதனைகளினூடாக அவர் யோபுவை அழைத்துக் கொண்டு போகக் கூடும் முன்பே, அவர் அவனுக்கு அந்த அணுகுமுறையைக் காண்பிக்க

வேண்டியதாயிருந்தது. இஸ்ரவேலர்களை வெளியே அழைத்துச் செல்ல தேவனால் கூடும் முன்பே, அவர் அந்த அணுகுமுறையைக் காண்பிக்க வேண்டியிருந்தது.

58. எனவே தான் ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்று, அதை வாசலின் மேலிருந்த சிலுவையின் அடையாளத்தில் தெளிக்க வேண்டுமென்று மோசே அவர்களுக்குக் கட்டளையிட்டான். தெளிக்கப்பட்ட பிறகு, வாசலின் உள்ளிருக்கும் விசுவாசி... இதைக் கவனியுங்கள். வேதவாக்கிய ஒழுங்கின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுங்கள். ஒருமுறை இரத்தத்தின் பின்னால் (வந்த) விசுவாசி, அதற்கு மேலும் அவனால் வெளியே போக முடியவில்லை, அந்த அணுகுமுறையின் வழியாக மாத்திரமே, அந்த இரத்தத்தின் வழியாகவே போக வேண்டியிருந்தது.

மரணம் பாதையில் இருந்தது. அந்த மரண தூதனால் இரத்தத்தைத் தொட முடியவில்லை. "நான் இரத்தத்தைக் காணும்போது, உங்களைக் கடந்து போவேன்." அந்த விசுவாசி அந்த அணுகுமுறையின் வழியாகவே வந்திருந்தான். தேவன் அவர்களுக்கு அற்புதங்களைச் செய்யப் போவதாய் இருந்தார். அந்த வெள்ளைப்பூண்டு பானைகளை விட்டு அவர்களைத் தூரமாய்க் கொண்டு சென்று, அவர்களுக்கு தூதர்களின் ஆகாரத்தைப் புசிக்கக் கொடுக்கப் போவதாக இருந்தார். ஆனால் அவர்கள் ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்கும் மட்டுமாக, அவரால் அதைச் செய்ய முடியவில்லை. ஆமென்.

59. எகிப்திலுள்ள பழைய சேற்றுத் தண்ணீர்களை விட்டு, அவர் அவர்களைத் தூரமாக அழைத்துச் சென்று, அவர்களுக்கு கன்மலையிலிருந்து புறப்படும் ஜீவத்தண்ணீர்களைக் கொடுக்கப் போவதாக இருந்தார். அவர் ஒரு அணுகுமுறையை உண்டாக்குமளவும் அவரால் அதைச் செய்ய முடியவில்லை. அவர்கள் வாஞ்சையின் மூலமாக அதைச் செய்ய முடியவில்லை. அங்கே ஒரு அருளப்பட்ட அணுகுமுறை இருக்க வேண்டியிருந்தது.

அவர்கள் சிவந்த சமுத்திரம் பிளந்து போவதைக் காணப் போவதாய் இருந்தனர். அற்புதங்கள் நடப்பதை அவர்கள் காணப்போவதாய் இருந்தனர். ஆனால் இந்தக் காரியத்தை அவர்களால் காணக் கூடும் முன்பே, அவர்கள் (அது ஆழமாக தோய்ந்து பரவட்டும்), அவர்கள் தேவனால் அருளப்பட்ட அணுகுமுறையின் வழியாக வர வேண்டியதாய் இருந்தது. கிறிஸ்தவர்களே, உங்களுக்கு அது புரிகிறதா?

60. அவர்கள் அதைப் பார்க்க விரும்புவதன் நிமித்தமாக அல்ல, ஏதோவொன்று சம்பவிப்பதை நீங்கள் காண விரும்புவதன் நிமித்தமாகவும் அல்ல. கிறிஸ்து சரியாக இருக்கிறாரா இல்லையா என்று நீங்கள் காண விரும்பினால், தேவனுடைய அணுகுமுறையின் வழியாகவே அவரிடம் வாருங்கள். அப்பொழுது நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

இப்பொழுது, விருத்தசேதனமில்லாதவர்கள் அதே காரியத்திடம் வந்து, அதே காரியத்தைச் செய்ய முயற்சித்தனர், அப்போது அவர்கள் தண்ணீரில் அமிழ்ந்து மாண்டு போயினர் (மரித்துப் போயினர்). உங்களுடைய ஜீவியம் பாழாய்ப் போகாதிருக்க நீங்கள் விரும்பினால், ஒரு கிறிஸ்தவனாய் இருப்பதாக போலியாக நடிப்பதை விட்டு விடுங்கள். ஏனென்றால் இங்கே வெளியே ஏதோ ஓரிடத்தில் நீங்கள் நாசமாய் போவதை நீங்களே காணப்போகிறீர்கள். ஆமாம், நீங்கள் தேவனால் அருளப்பட்ட அணுகுமுறையின் வழியின் மூலமாகவே வருகிறீர்கள்.

61. இன்று பிற்கலில், நான் வீட்டிற்குப் போகத் தொடங்கி, நான் சென்று - விளைநிலங்களின் குறுக்காக கடந்து போவேனேயானால், நான் எங்கோ ஓரிடத்திலுள்ள சேறும் சகதியுமான ஒரு குட்டையில் அமிழ்ந்து போவதை நானே காண்பேன். ஜெபர்ஸன்வில்லுக்குப் போகும் ஒரு அணுகுமுறையை அந்த நெடுஞ்சாலை உடையதாயிருக்கிறது, நான் அந்த நெடுஞ்சாலையின் வழியாகவே போயாக வேண்டும். நீங்கள் அப்படியே சாலையில் வருவீர்களானால், பிரயாணம் செய்வது

எளிதாயிருக்கும். சுயத்திற்கு மரித்து விட்டு, கிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாக வாருங்கள், அப்பொழுது தான் பிதாவிடம் அணுகி வர முடியும், உங்களை ஒரு விசுவாசியாக ஆக்குகிற பரிசுத்த ஆவியை அவர் உங்களுக்கு அருளுவார். ஏனென்றால் அதற்கு மேலும் விசுவாசிப்பது நீங்களல்ல, அது உங்களுக்குள்ளிருக்கிற பரிசுத்த ஆவியானவரே. உங்களுடைய சுபாவம் மாற்றப்பட்டு விட்டது.

ஓ, நமக்கு அதிக நேரம் இருந்திருக்க விரும்புகிறேன், ஆனால் அது... என்னுடைய நேரம் கடந்து விட்டது. ஓ, நான் வார்த்தையை நேசிக்கிறேன், நீங்கள் நேசிக்கவில்லையா?

62. கவனியுங்கள், அவர்கள் அற்புதங்களைக் காணக்கூடும் முன்பே, அவர்கள் அந்த அருளப்பட்ட அணுகுமுறையில் வர வேண்டியதாய் இருந்தது. அவர்கள் சிவந்த சமுத்திரம் பிளந்து போவதைக் காணக் கூடும் முன்பே, அவர்கள் மகிமையில் பங்கு கொள்ள வேண்டியிருந்தது... கவனியுங்கள். அவர்கள் அந்த மகிமையில் பங்குள்ளவர்களாக ஆகக்கூடும் முன்பே, அவர்கள் அந்த vine - தெய்வீக அணுகுமுறையில் அல்லது தெய்வீக ஒழுங்குகளில் பங்குள்ளவர்களாக (partaker) இருக்கும்படிக்கு தேவனுடைய அந்த அருளப்பட்ட அணுகுமுறையில் வர வேண்டியிருந்தது. இந்த ஆசீர்வதிக்கப்பட்ட பரலோக அழைப்பில் நீங்கள் எப்பொழுதாகிலும் பங்குள்ளவர்களாக ஆகக்கூடும் முன்பே, நீங்கள் அந்த அருளப்பட்ட அணுகுமுறையின் வழியாக வர வேண்டும், சுயமாகத் தாங்கிப் பிடித்துக் கொள்ளவதல்ல, அறிவுத்திறனுமல்ல, ஆனால் உங்களுக்கு நீங்களே மரித்து, இரத்தமாகிய பலியின் வழியாக கிறிஸ்து இயேசுவுக்குள் மறுபடியும் பிறப்பது தான். பிறகு...

63. நீங்கள், “என்னே, நான் ஏன் நீண்டகாலத்திற்கு முன்பே இந்தக் காரியங்களை அறியாமற்போனேன்?” என்று கூறலாம். அப்போது நீங்கள் உங்கள் சபையின் மூலமாகவே வர முயன்று கொண்டிருந்தீர்கள். நீங்கள் உங்கள் ஸ்தாபனத்தின் வழியாகவே வர முயற்சித்துக் கொண்டிருந்தீர்கள். துணையாயிருக்கும் அல்லது

வேறு ஏதோவொன்றின் வழியாகவே நீங்கள் வர முயற்சித்துக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் உங்களுடைய சொந்த நற்கிரியைகளின் மூலமாகவும், உங்களுடைய நற்பண்புகள் மூலமாகவும் வர முயற்சித்துக் கொண்டிருந்தீர்கள்.

அப்படியானால் நீங்கள் ஒருபோதும் அதைக் காணவே மாட்டீர்கள். நீங்கள் அந்தக் காரியங்களுக்கு மரித்து, தேவனால் அருளப்பட்ட அணுகுமுறையின் வழியில் வருமட்டுமாக உங்களால் அதை நெருங்கவே முடியாது, அந்த அணுகுமுறையின் வழி இயேசு கிறிஸ்து தான், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது தான், அதுதான் பாவிகள் வரும்படிக்கு தேவனால் அருளப்பட்ட வழியாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் நன்மையிலிருந்தும், புதிய ஏற்பாட்டின் நன்மையிலிருந்தும் உங்களால் ஒருபோதும் பாலைப் பருக (nurse) முடியாது. சந்தோஷம், சமாதானம், திருப்தி, உங்கள் சரீரம் சுகமடைதல் ஆகியவற்றிலிருந்தும் உங்களால் பாலைப் பருகவே முடியாது. நீங்கள் விலகி நின்று, குறைகூறிக் கொண்டு, "ஓ, அது நீண்ட காலத்திற்கு முன்பு இருந்திருக்கலாம், ஆனால் இப்பொழுது அந்த அணுகுமுறை எல்லாம் உலர்ந்து போய் விட்டது என்று நம்புகிறேன்" என்று கூறலாம். கவனியுங்கள், கிறிஸ்துவே தேவனுடைய அணுகுமுறையாக இருந்தால், அப்போது தேவனே எல் ஷடாயாக இருக்கிறார். ஆமென். எனவே அருளப்பட்ட பாதைக்கு வந்து விடுங்கள். பக்கவழியாகச் போக முயற்சிக்காதீர்கள்; அருளப்பட்ட வழிக்கு வாருங்கள்.

64. அந்த அழகான உவமையில், அதற்குள் செல்ல நமக்கு நேரம் இருக்குமானால், கலியாண விருந்தைப் பற்றிய அந்த உவமையில். அந்த மணவாளன் எப்படியாக வஸ்திரங்களைக் கொடுத்தான், அவன் எப்படியாக யாவரையும் வருமாறு அழைத்தான். வஸ்திரங்கள் எல்லாரையும் ஒரேவிதமாகத் தோற்றமளிக்கச் செய்தது. அவர்கள் ஒரு வாசலண்டையில் நின்றிருந்தனர். அவர்கள் வருகையில், அவர்களுக்கு அனுமதி சீட்டுகள் (passes) வழங்கப்பட்டன, கீழ்த்திசை நாடுகளிலும், இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் அது மிகவும் அற்புதமான

விதமான இன்னும் அவ்வாறு நடந்து கொண்டு தான் இருக்கிறது. அவர்கள் வஸ்திரங்களைக் கொடுக்கிறார்கள். எல்லாரும் அழைக்கப்பட்டு, (ஒவ்வொருவரும்) ஒரு வஸ்திரத்தைப் பெற்றுக் கொண்டனர். எனக்கு அது பிடிக்கும். எனவே பிறகு...

65. அவர்கள் கதவண்டை வரும்போது, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அழைப்பிதழைப் பெற்றுக் கொள்ளும்படி வாசலில் ஒரு மனிதன் இருப்பான். அவர்கள் உள்ளே வரும்போது, ஒரு வஸ்திரத்தை அணிந்து கொள்வார்கள். பிறகு வேறொருவர் உள்ளே வருவார், அடுத்து வெறொருவர் உள்ளே வருவார். பிறகு அவர்கள் அங்கு உள்ளே சென்ற போது, விருந்து ஆயத்தமாக்கப்பட்டிருந்தது, அப்போது (கலியாண) வஸ்திரம் தரித்திராத ஒரு மனிதன் அங்கேயிருப்பதை அவன் கண்டுபிடித்தான். என்ன சம்பவித்தது?

அவன் ஒரு ஜன்னல் வழியாக வந்திருந்தான் என்பதை அது காண்பித்தது, அவன் வாசலை விட்டு சுற்றிச்சென்று வேறொரு வழியாக உள்ளே வந்திருந்தான். அவன் அருளப்பட்ட அணுகுமுறையில் வரவில்லை, ஏனென்றால் வாசலில் நிற்கும் மனிதன் (gate man) அவனை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பியிருந்தான். வஸ்திரமானது அவர்கள் எல்லாரையும் ஒன்று போலவே தோற்றமளிக்கச் செய்கிறது. நீங்கள் ஐசுவரியமுள்ளவர்களோ அல்லது ஏழைகளோ, அடிமைகளோ அல்லது சுயாதீனமுள்ளவர்களோ, நீங்கள் யாராயிருந்தாலும், வஸ்திரத்தைத் தரித்துக் கொள்ளும்போது, நீங்கள் மற்றவர்களைப் போலவே காணப்படுகிறீர்கள். நீங்கள் அந்த வஸ்திரத்தைத் தரித்திருக்கும் போது, சித்திர வேலைப்பாடுடைய ஆடைகளையோ மற்றும் எல்லாவற்றையும் பெருமையோடே காட்டிக் கொண்டிருக்க முடியாது.

66. எனவே அப்படியானால், அவன் ஒரு ஜன்னல் வழியாகவோ அல்லது பின்பக்க கதவு வழியாகவோ அல்லது வாசலைச் சுற்றி பக்க வழியாகவோ வந்திருந்தான் என்பதையே அது காண்பித்தது. இயேசு, “சிநேகிதனே, நீ இங்கே என்ன செய்து

கொண்டிருக்கிறாய்?" என்றார். அவனோ பேசாதிருந்தான். பாருங்கள், தேவனுக்கு ஒரு அணுகுமுறை உண்டு, நாம் நிச்சயமாக அந்த அணுகுமுறையின் வழியாகவே வர வேண்டும். அந்த அணுகுமுறை வழியாக வருகிற ஒவ்வொரு மனிதனும் சுயத்திற்கு மரித்து, கிறிஸ்துவிடம் வந்து, புதிதாக மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறான், அப்போது தேவனுடைய நீதியின் வஸ்திரம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதுமுதற்கொண்டு நீங்கள் கிறிஸ்துவுக்காகவே ஜீவிக்கிறீர்கள். நீங்கள் தேவனால் அருளப்பட்ட அணுகுமுறையில் வருகிறீர்கள்.

67. அப்போது நீங்கள் உங்களுக்குள் புது ஜீவனைப் பெற்றிருப்பீர்கள். பழைய பாவ வாழ்க்கை ஒழிந்து போயிற்று. அதோ அங்கே அநேக வருடங்களுக்கு முன்பிருந்த தேவனைக் குறித்த பழைய மாம்சீக சிந்தைகள்... தேவன் ஜீவிக்கிற ஒருவராய் இருக்கிறார், அவர் அதோ அங்கே வெளியில் இருப்பவர் மாத்திரமல்ல, ஆனால் அவர் சரியாக இப்பொழுதே இங்கே உள்ளேயிருக்கிறார். அவர் சொன்ன யாவுமே சத்தியமாயுள்ளது, அதன் ஒவ்வொரு சிறு காரியத்தையும் நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.

68. அதன்பிறகு நீங்கள் மற்றவர்களைக் குறைகூற மாட்டீர்கள். நீங்கள் உங்கள் மேய்ப்பரிடத்திலோ, மற்ற... எல்லாரிடத்திலும் குற்றம் கண்டுபிடிக்க மாட்டீர்கள். இந்தவிதமாகப் பேசுகிற ஸ்திரீகளே, நீங்கள் அவர்களுக்காக இரக்கப்பட்டு, அவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். அப்போது நீங்கள் தேவனால் அருளப்பட்ட அணுகுமுறையில் வந்து கொண்டிருக்கிறீர்கள். புரிகிறதா? உங்களுக்குள்ளாக இருக்கும் நிறைய தப்பிதங்களைக் கிறிஸ்து கண்டிருந்தால், என்னவாயிருக்கும், அவர் உங்களுக்காக மரித்திருக்க மாட்டாரே? ஆனால் பாருங்கள், அவர் தேவனுடைய அணுகுமுறையாக - அவர் வழியாக தேவனிடம் வருகிற நம்முடைய அணுகுமுறையாக அவர் இருந்தார். உங்களுக்கு அது புரிகிறதா?

இப்பொழுது, கவனியுங்கள். இஸ்ரவேலருக்கு சுகம் தேவைப்பட்ட போது, எல்-ஷடாய்... அவர்களுக்கு சுகம்

தேவைப்பட்ட போது, அவன் ஒரு ஒழுங்கை, ஒரு தெய்வீக ஒழுங்கை அங்கே கொண்டிருந்தான், அது சுட்டிக்காட்டும் வழியாக இருந்தது, அது ஒரு சர்ப்பமாக இருந்தது, அவர்கள் அதை நோக்கிப் பார்த்து, விசுவாசித்து, சுகமடைந்தார்கள். இப்பொழுது, நமக்கு நேரம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால் நிச்சயமாகவே, காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. நாம் அதை இப்பொழுது நெருக்கமாகக் கொண்டு வருவோம்.

69. இப்பொழுது, இந்த அருமையான எல்லா காரியங்களும்... வேறு அநேக கதாபாத்திரங்களும் (characters) இப்பொழுது என்னுடைய இருதயத்தில் பிரகாசமாக இருக்கின்றன, ஆனால் நான் அப்படியே துரிதமாகப் போயாக வேண்டும். கவனியுங்கள்.

இப்பொழுது, கிறிஸ்தவ அணுகுமுறையைக் குறித்து என்ன? நாம் எவ்வாறு அணுகுகிறோம்? தேவன் ஒருநாள் ஏதேன் தோட்டத்தில் செய்தது போல, அவர் கிறிஸ்து இயேசுவுக்கு ஒப்பனையாயிருந்த, ஒரு குற்றமற்ற ஆட்டுக்குட்டியை எடுத்து, ஒரு மூடலுக்காக அதைக் கொன்று, அந்த ஆட்டுக்குட்டியின் தோலை உரித்து விட்டு, அந்தத் தோலை எடுத்து, அந்த பாவமுள்ள மனிதன் மேல் போர்த்தினார், அவன் நிச்சயமாகவே அந்த குற்றமற்றதினுடைய மூடலைக் (covering) கொண்டிருக்க வேண்டும்.

தேவன் தமது குமாரனைக் கல்வாரிக்கு எடுத்துச்சென்று, அவருடைய மாம்சத்தை அவரிடமிருந்து உரிந்து போட்டு (stripped), இரத்தத்தை சிந்தி, இயேசு கிறிஸ்துவின் நீதியை எடுத்து, குற்றமற்றவனை மூடுகிற ஆவியை விட்டார். அங்கே தான் தேவனுடைய அணுகுமுறை இருக்கிறது.

70. அதனோடு போகிற தெய்வீக ஒழுங்குகள் ஏதாகிலும் இருக்கிறதா? ஆம். அப்போது தேவன் தமது இருக்கத்தினால், கிறிஸ்துவை தமது வலது பாரிசத்தில் உட்கார வைத்த பிறகு, பரிசுத்த ஆவியைத் திரும்ப அனுப்பினார். பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களையும், போதகர்களையும், சுவிசேஷகர்களையும்,

சுகமளிக்கும் வரங்களையும், அற்புதங்களையும், அந்நிய பாஷையில் பேசுவதையும், பாஷைக்கு அர்த்தம் உரைத்தலையும் அடையாளங்களாக சபையில் நியமித்தார்; உங்களுடைய ஒழுங்குக்காக, சபை முன்னேறிப் போகையில் அடையாளங்களும் அற்புதங்களும் அதனோடு கூட பின்தொடருகின்றன. தெய்வீக காரியம், குறித்துக் காட்டுவதற்கான ஏதோவொன்று, தெய்வீக மன்னிப்பு, பரிசுத்த ஆவியானவர் இங்கே பிரசன்னமாயிருக்கிறார், அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய, தேவனுடைய அதே ஜீவனிலிருந்து வெளியே வந்தது. அவருடைய பிரசன்னம் இங்கே இருக்கிறது.

வார்த்தையைப் பிரசங்கம் பண்ணுதல் அவருடைய பிரசன்னத்தைக் கொண்டு வருகிறது. அற்புதங்கள் நடப்பிக்கப்படுவது அவருடைய பிரசன்னத்தைக் கொண்டு வருகிறது. நீங்கள் வரும் போது, "நான் தேவனை அணுக விரும்புகிறேன்" என்று கூறுலாம்.

சிலர், "நல்லது, இப்பொழுது, நான் எவ்வாறு அவரை அணுகலாம்?" என்று கேட்கலாம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக அவருடைய அருளப்பட்ட அணுகுமுறையில் வருவது தான்.

பிறகு அவர் மற்ற காரியங்களையும் உடையவராயிருக்கிறார், வார்த்தையைப் போதித்தல். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுதலையும் கொண்டிருக்கிறார்; அவர் தரிசனங்களையும், அடையாளங்களையும், அற்புதங்களையும், அதிசயங்களையும், அவருடைய தெய்வீக அணுகுமுறையிடம் வருகிற எல்லாவற்றையும் உடையவராயிருக்கிறார், நீங்கள் அவரிடம் வழிநடத்தப்பட்டு, நித்திய ஜீவனை நோக்கிச் சென்றே ஆக வேண்டும்.

71. கொஞ்ச காலத்திற்கு முன்பு - மார்பகம் கொண்டவர், எல் ஷடாய் என்பதை நான் முடிப்பதற்கு முன்பாக சிந்தித்துப் பார்க்கிறேன். ஓ, (அனேக) வருடங்களுக்கு முன்பு, கர்த்தருடைய தூதனானவர் எப்போதும் எனக்குத் தரிசனமாவார். ஒரு இரவில்,

நான் என்னுடைய அறையில் உட்கார்ந்து, ஜெபித்துக் கொண்டிருந்தேன், அல்லது சரியாகச் சொன்னால், என்னுடைய தாயாரின் வீட்டில் இருக்கும் போது. என்னுடைய தாயார் ஒரு பழைமை நாகரீகமான நாட்டுப்புற பெண்மணி ஆவார்கள். அவர்கள் தங்கள் துணிகளைத் துவைத்து, மூலையில், ஒரு நாற்காலியின் மேலிருந்த ஒரு பெரிய கூடையில் வைத்திருந்தார்கள், அந்தத் துணிகளை ஒரு நாற்காலியில் போடுவார்கள். நான்-நான்... அது சரியாக நான் என்னுடைய மனைவியை இழந்த பிறகு, ஏறக்குறைய மூன்று அல்லது நான்கு வருடங்கள் கழித்து, நான் அவைகளை ஒன்றாகக் கூட்ட முயன்று கொண்டு, உள்ளே நுழைந்து, நான், "அம்மா, நான்-நான்-நான் உங்களிடம் சிறிது நேரம் பேச விரும்புகிறேன்" என்றேன்.

72. அவர்கள், "பில்லி, உட்கார்" என்றார்கள். நான் உட்கார்ந்தேன், நாங்கள் கர்த்தரைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம். இப்படியிருக்க நான் வேறொரு அறைக்குள் சென்று, "அம்மா, நான் சிறிது நேரம் ஜெபிக்க வேண்டும் போல் உணருகிறேன்" என்றேன்.

அவர்கள், "நல்லது, உனக்கு நீயே உதவி செய்து கொள்" என்றார்கள். நான் அந்த அறைக்குள் சென்று, அங்கே முழங்கால்படியிட்டு, ஜெபிக்கத் தொடங்கினேன். நான் ஏறக்குறைய ஒரு மணி வரைக்கும் ஜெபித்தேன். பிறகு நான் எழுந்து, "நல்லது, நான் மேல் வீட்டிலிருக்கிறதைக் குறித்து வியப்படைவேன் என்று நம்புகிறேன்" என்று நினைத்தேன். பிறகு, நான் அந்த மூலையை நோக்கிப் பார்த்து, தாயாருடைய ஆடைகள் வைக்கப்பட்டிருந்த நாற்காலியைக் காண்கிறதாக நினைத்தேன், (அங்கே) ஏதோவொன்று வெண்மை நிறமாயிருந்தது, ஆனால் அதற்குப் பதிலாக அங்கே இருந்தது அந்த ஒளியாக இருந்தது, அது அசைந்து கொண்டே, என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அது என்மேல் வந்த போது, நான் நோக்கிப் பார்த்து, நாம் "shotgun" வீடு என்று அழைக்கும் ஒரு சிறிய பழைய வீட்டைக் கண்டேன், அந்த வீட்டில் நேராக ஒரே வரிசையில் இரண்டு

அல்லது மூன்று சிறிய அறைகள் இருந்தன. எனவே... நான் அதை நோக்கி நடந்தேன், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி போய்க் கொண்டிருந்தேன். நான் அந்த இடத்திற்குள் போன போது, சுவரில் சிகப்பு நிற தாள் இருந்தது, அங்கே ஒரு சிறிய பழைய விளம்பரத் தட்டினால் ஆன கட்டில் (poster bed) இருந்தது, அங்கே ஒரு சிறிய பையன் படுத்திருந்தான். அவனுக்கு சின்னஞ்சிறிய உதடுகள் இருந்தன, அவன் சிறிய நீல நிற மேலாடையைப் போன்றதை அணிந்திருந்தான். அவனுடைய சிறிய சரீரமானது சுற்றிலும், சுற்றிலும், சுற்றிலும் திருகி முறுகிப் போயிருந்தது. அவனுடைய சிறிய கைகள் அவனது பக்கவாட்டின் மீதாக இழுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு காலும் முறுகித் திருகியிருந்தது, இங்கிருந்து பற்றிப்பிடித்து, அவனுடைய சரீரமானது இங்கு வரையில் திருகியிருக்கும் ஏதோவொன்றைப் போன்று அது காணப்படும் அளவுக்கு அவனுடைய சரீரம் திருகியிருந்தது.

73. நான், "ஓ, இரக்கம். இது அவர்களில் ஒருவனாக இருக்க வேண்டும்... இது தரிசனமா என்று கூட எனக்குத் தெரியவில்லையே" என்று நினைத்தேன். அது அவ்வாறு இல்லை என்று கற்பிக்கப்பட்டிருந்தேன், (அப்படியாக) அது சம்பவித்தது, என்னால் அதிலிருந்து விலகியிருக்க முடியவில்லை. நான் அங்கேயிருந்து, அந்தச் சிறு பையனை நோக்கியபடி நின்று கொண்டிருந்தேன். நான், "ஓ, என்னே, அந்த பரிதாபமான சிறு பையன்" என்று நினைத்தேன்.

தகப்பனார் சென்று அவனை எடுத்து, என்னிடம் கொண்டு வந்தார். அப்போது இதோ நின்று கொண்டிருக்கிற ஒரு சத்தத்தை நான் கேட்டேன். அதற்கு முன்பு, அந்தத் தூதனானவரை நான் ஒருபோதும் கண்டதில்லை. அதற்குப் பின்பும், பல வருடங்களாக நான் அதைக் கண்டதேயில்லை, ஆனால் நான் எப்போதுமே அந்த சத்தத்தைக் கேட்டிருக்கிறேன். அவர் இங்கே நின்றுகொண்டு, "இப்பொழுது, அந்தக் குழந்தையின் மேல் உன் கரங்களை வை" என்றார். நான் என் கரங்களை அந்தக் குழந்தையின் மேல் வைத்த போது, அது அந்த மூலையில் குதித்து, அவனுடைய தகப்பனாரின்

கைகளை விட்டுப் போனதைக் கண்டேன், அப்படியே ஒரு... ஒரு காலை ஊன்றியவுடன், அந்தக் கால் திருகி முறுக்கப்பட்ட நிலையில் இருந்து சரியானது (unwound). மற்ற காலை ஊன்றியவுடன் அதுவும் சரியானது (unwound). அதன்பிறகு அவனுடைய சரீரத்தின் மற்ற பாகங்களும் சரியாயின (unwound). பிறகு அவன் என்னை நோக்கி நடந்து வந்து, தன்னுடைய கரங்களை மேலே என்மேல் வைத்தான். அவன் ஒரு சிறிய... ஐக் கொண்டிருந்ததைப் போன்று காணப்பட்டது. அவனுடைய உதடுகளில் இவ்விதமாக மோர் அல்லது சாக்கலேட் பாலினாலான ஒரு சிறு மீசையைக் கொண்டிருப்பது போன்று காணப்பட்டது. அவன், "சகோதரன் பிரன்ஹாமே, நான் பரிபூரணமாக சுகமடைந்து விட்டேன்" என்றான்.

74. இப்படியிருக்க, நான்-நான் தரிசனத்தை விட்டு வெளியே வந்தேன், ஏனென்றால் அது அதிகாலை வேளையாயிருந்தது, அப்போது யாரோ ஒருவர் கதவைத் தட்டிக் கொண்டிருந்தார். [சகோதரன் பிரன்ஹாம் தட்டுகிறார் - ஆசிரியர்.] அது அவ்வாறு இருக்க, ஒரு மனிதன், "திருமதி. பிரன்ஹாம் அவர்களே, சகோதரன் பிரன்ஹாம் இங்கே இருக்கிறாரா?" என்று உரக்க கத்திக் கொண்டிருந்தார். நான்... அம்மாவால் தூக்கத்தை விட்டு விழித்தெழும்ப முடியவில்லை. நான் ஒருவிதமாக அதை விட்டு வெளியே வந்து, உங்களுக்குத் தெரியும். அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன், அப்போது அவர்கள், "பில்லி" என்று கூறுவதைக் கேட்டேன்.

75. நான், "ஆம்" என்றேன்.

அவர்கள், "யாரோ ஒருவர் கதவண்டை நிற்கிறார்" என்றார்கள். நான் கதவருகில் சென்று அதைத் திறந்தேன், அது திரு. எமில் அவர்களாக இருந்தது.

அவர், "ஹலோ, பில்லி" என்றார்.

நான், "ஹலோ ஜான், என்ன விஷயம். நான் உங்களை நீண்ட காலமாகப் பார்க்கவில்லை. உள்ளே வாருங்கள்" என்றேன். அவர்

உட்கார்ந்தார்; நான் என்னுடைய முகத்தை தேய்த்து துடைத்தவண்ணம் இருந்தேன், ஏனென்றால் அந்தக் காரியங்கள் சம்பவிக்கும் போது, என்னுடைய முகமானது மிகவும் மரத்துப் போய் விடுகிறது.

சில ஜனங்கள் அதைக் குறித்துக் கேட்கிறார்கள், இன்று எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது, அதில், "நீர் ஏன் எப்போதுமே உம்முடைய முகத்தைத் தேய்த்துக் கொண்டிருக்கிறீர்" என்று எழுதப்பட்டிருந்தது. அது மரத்துப் போய், மிகவும் இறுக்கமாக இருப்பதாக உணரச் செய்கிறது. நான்... எனவே நான்-நான் அங்கே உட்கார்ந்து என்னுடைய முகத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தேன். இது ஏறக்குறைய 16 வருடங்களுக்கு முன்பு நடந்தது என்று நினைக்கிறேன்.

எனவே, அவர், "நல்லது, இதோ பாருங்கள், பில்லி. நான் கூற விரும்புகிற முதலாவது காரியம் என்னவென்றால், நான் செய்த அந்தக் காரியத்திற்காக வருந்துகிறேன்" என்றார்.

76. நான், "திரு. எமில் அவர்களே, என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

அவர், "நீங்கள் அந்நாளில் அங்கே கீழே ஒரு தாழ்வான இடத்தில் மக்காச்சோளத்தை அறுவடை செய்து கொண்டிருந்த போது, நாம் அங்கே கீழே மீன்பிடித்துக் கொண்டு, நீர் எங்களிடம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து பேசிக் கொண்டிருந்த போது, அந்த ஆற்றின் கரையில் இருந்தது உமக்கு நினைவிருக்கிறதா?" என்றார்.

நான், "ஆமாம்" என்றேன்.

"நீர் தளர்த்தியான மேலாடையை அணிந்து கொண்டு, என்னையும் என்னுடைய குடும்பத்தினரையும் வெளியே அந்த ஆற்றுக்கு அழைத்துச் சென்று, எங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தீரே" என்றார்.

நான், “ஆமாம், நான் அனேக நேரங்களில் அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறேன்” என்றேன். விலங்குகள் வேட்டையாடப்படுவதைக் கண்காணிக்கும் அதிகாரியாக (game warden) நான் இருந்த போது, என்னுடைய சீருடையில் இருந்தவாறே தண்ணீரில் நடந்து சென்று, ஞானஸ்நானம் கொடுத்து விட்டு, மேலே வந்து, சற்று ஈரத்தை உலர விட்டு விட்டு, விரைந்து சென்று, என் காரில் ஏறி மறுபடியுமாக, ரோந்துக்கு புறப்பட்டுச் சென்று விடுவேன். பாருங்கள், அது ஒரு காரியமில்லை… நீங்கள் அதிகமாக பகட்டாரவாரத்தையும், காரியத்தையும் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஒரு விசுவாசி ஆயத்தமாக இருக்கும் போதே, அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து விடுங்கள். ஞானஸ்நானம் கொடுக்க வேண்டிய நேரம் அதுவே. எப்படியும் தேவனுக்கு எந்த சடங்கு முறை சம்பிரதாயமான காரியமும் கிடையாது. “விசுவாசித்தவன் ஞானஸ்நானம் பண்ணப்பட்டான்” என்று தான் அது இருக்கிறது.

77. அவர், “நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, அப்போது எனக்கு இரண்டு சிறு பிள்ளைகள் இருந்தார்கள், எனக்கு இரண்டு சிறிய மகன்கள் இருந்தார்கள்” என்றார்.

நான், “ஆமாம், எனக்கு நினைவிருக்கிறது” என்றேன். அது நான்கு, ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பு.

அவர், “நல்லது, நான் வருந்துகிறேன். நான் தவறான பாதையைத் தெரிந்து கொண்டேன். நான் இங்கே பொடி உற்பத்தி செய்யும் இந்த ஆலைகளில் (powder plants) ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தேன். (அப்போது) நான் ஒரு மனிதனைக் கொன்றேன். நான் ஒரு சுத்தியால் அவனை அடித்தேன்; நாங்கள் சண்டையிட்டோம். அவன் முதலில் என்னை அடித்தான், அவன் என்னை உதைத்து அங்கேயிருந்த ஒரு பெரிய கொப்பறைக்குள் எறியப் போவதாக இருந்தான், அங்கே கொதித்துக் கொண்டிருந்த அந்தக் cottons-களில் சில அவர்களுக்கிருந்தன, எப்போதுமே அது அவ்விதமாகவே இருந்தது. அவன் என்னை அடித்தவுடனே

நான், ஒரு சுத்தியை (சம்மட்டியை) சட்டென எடுத்து, அதைக்கொண்டு அந்த மனிதனை அடிக்க, அது அவனைக் கொன்று போட்டது. நான்-நான் அதற்காக ஒரு வருடம் தண்டனை அனுபவித்தேன்" என்றார், ஆனால், "அது தற்காப்பிற்காக செய்யப்பட்ட கொலை என்ற காரணத்தினால் தான் அவ்விதம் ஆனது" என்றார்.

78. அவர், "நான் தேவனிடம் போவதற்குப் பதிலாக, வீட்டிற்கு வந்து, குடிக்கவும் தவறான காரியங்களைச் செய்யவும் தொடங்கினேன். என்னுடைய மூத்த மகனை இழந்து விட்டேன். சகோதரன் பிரன்ஹாமே, சற்றே ஒரு மணி நேரத்துக்கு முன்பு, இங்கே இந்தப் பட்டணத்தைச் சேர்ந்த மருத்துவராகிய டாக்டர் புருனர் இப்பொழுது தான் என்னுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். என்னுடைய மற்ற சிறிய மகன் நிம்மோனியாவினால் மரித்துக் கொண்டிருக்கிறான். பகல் வெளிச்சம் வரை அவனால் உயிரோடு இருக்க முடியாது என்று மருத்துவர் கூறுகிறார். நான் உம்மிடம் வந்து, நான் செய்ததற்காக நீர் என்னை மன்னிப்பீரா என்றும், நீர் வந்து எனது குழந்தைக்காக ஜெபிப்பீரா என்றும் உம்மிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்தேன்" என்றார்.

"ஏன்," நான், "நிச்சயமாக, சகோதரனே" என்றேன். நான் சொன்னேன்...

79. அவர், "என்னுடைய மைத்துனரை (cousin) அழைத்து வரப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார், அதற்குப் பிறகு அவர் என்னுடைய கூட்டாளிகளில் ஒருவராக ஆனார், அவர் தான் கிரஹாம் ஸ்நெல்லிங். அவர், "அவர் ஒரு கிறிஸ்தவர்; நாம் எல்லாரும் போய் ஜெபிக்கலாம் என்று நினைத்தேன்" என்றார். அப்போது அம்மா உள்ளே வந்தார்கள்.

நான், "நான் ஆயத்தமாகி விடுகிறேன், நீர் திரும்பி வந்து என்னை அழைத்துச் செல்லும்" என்றேன். அம்மா ஆயத்தமானார்கள், அல்லது இன்னும் சரியாகச் சொன்னால்,

நானே ஆயத்தமாகி வெளியே சென்றேன். அம்மா, "பில்லி, அங்கே உள்ளே என்ன விஷயம்?" என்று கேட்டார்கள்.

நான், "அம்மா, அது ஒரு தரிசனம். இந்த மனிதருக்கு ஒரு சிறிய மகன் இருக்கிறான், அவன் சுகமடையப் போகிறான் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றேன். அவர்களுக்கு அவரைத் தெரியவில்லை. நான், "நல்லது, அவன் இந்தக் காலையில் சுகமடையப் போகிறான் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றேன்.

அவர்கள், "நீ போகிறாயா... நீ இப்பொழுது போகவில்லையா?" என்றார்கள்.

நான், "ஆமாம், நான் இப்பொழுது புறப்பட்டுப் போகிறேன். அவர் எனக்குப் பின்னால் திரும்பி வருகிறார்" என்றேன். சற்று நேரத்தில், அவர் என்னை அழைத்துச் சென்றார். நாங்கள் சாலையில் போகத் தொடங்கினோம், அப்போது அவர் சொன்னார்... அங்கே பாய்ந்து கொண்டிருக்கும் நதியின் பக்கவாட்டு பகுதியின் மேலிருக்கும் அந்தப் பழைய கப்பல் கட்டும் இடத்தின் பக்கமாக தொடர்ந்து பிரயாணம் செய்து மேலே போய்க் கொண்டிருந்தோம்.

80. நான், "திரு. எமில் அவர்களே, நீங்கள்... நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர், "நான் ஊடிகாவுக்கு மேலாக, மேலே அந்த நாட்டில் வசிக்கிறேன்" என்றார்.

நான், "நான் அனேக வருடங்களாக உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கவில்லை. கொஞ்சம் நீளமான ஒரு shotgun வீட்டைப் போன்ற, அதுபோன்ற ஒரு வீட்டில் நீர் வசிக்கவில்லையா?" என்றேன்.

அவர், "ஆம்" என்றார்.

நான், "நீர் இவ்விதமான ஒரு சிறு வாசல் வழியாக மேலே வந்து, கொஞ்சம் பெரிய கற்களுக்கு மேலே சென்று, மேலே

போனீர், அங்கே ஏதோவொரு பெரிய அத்தி இன மரங்கள் (sycamore) நின்று கொண்டிருக்கின்றது" என்றேன்.

அவர், "ஆமாம்" என்றார்.

நான், "நீர் வைத்திருக்கிறீர் - நீர் சுவர்களில் சிவப்பு நிற காகிதத்தை வைத்திருக்கிறீர்" என்றேன்.

அவர், "அது உண்மை" என்றார்.

நான், "நீர் உள்ளே போகும் போது, உம்முடைய சிறிய மகன், வாசலின் வலது பக்கத்தில் இருக்கிற ஒரு படுக்கையில், சிறிய, இரும்பினாலான poster bed-ல் படுத்துக் கொண்டிருக்கிறான்" என்றேன்.

அவர், "நீர் எப்பொழுதாவது அங்கே இருந்தீரா?" என்று கேட்டார்.

81. நான், "ஆம், ஐயா" என்றேன்.

அவர், "நல்லது, பில்லி, நீர் எப்போது அங்கே இருந்தீர், நான் ஏறக்குறைய இரண்டு வாரங்களாக மட்டுமே அங்கே வசித்து வருகிறேன். நாங்கள் ஓஹியோவிலிருந்து வந்திருக்கிறோம்" என்றார்.

நான், "நான் ஏறக்குறைய ஒன்றரை மணி நேரத்துக்கு முன்பு தான் அங்கே இருந்தேன்" என்றேன்.

அவர், "ஏன், பில்லி, எனக்கு-எனக்கு-எனக்கு புரியவில்லையே" என்றார்.

நான், "உங்களுடைய சிறிய மகன் ஒருவித நீல நிற தடித்த இழைகள் கொண்ட பருத்தி துணியினாலான ஒரு ஜோடி தளர்த்தியான மேலாடைகளை அணிந்திருக்கவில்லையா?" என்று கேட்டேன்.

அவர், "அவன் இப்பொழுது அவைகளைத் தான் அணிந்திருக்கிறான்" என்றார்.

“அவ்வாறு தான் நானும் நினைத்தேன்” என்றேன். நான், “உம்முடைய மனைவி ஒருவிதமாக கருமை நிற தலைமுடியைக் கொண்ட ஒருவித ஒல்லியான பெண் அல்லவா?” என்றேன்.

அவர், “ஆம்” என்றார்.

“நீங்கள் ஒன்(றரை)... மணி நேரத்துக்கு (முன்பு) எப்போது என் வீட்டில் இருந்தீர்கள்?” என்று கேட்டார்.

நான், “ஆமாம், திரு. எமில் அவர்களே, நான் ஒரு மணி நேரத்துக்கு முன்பு அல்லது ஒன்றரை மணி நேரத்துக்கு முன்பு தரிசனத்தில் உம்முடைய வீட்டில் இருந்தேன், அல்லது ஏதோவொரு வித ஆவி என்னை அங்கே எடுத்துச் சென்றது. கர்த்தர் உம்முடைய குழந்தையை சுகப்படுத்தப் போகிறார்” என்றேன். உடனே அவர் அந்தப் பழைய மாடல் A ஃபோர்டு காரை பிரேக் போட்டு நிறுத்தி விட்டு, தம்முடைய காரை திருப்பும் சக்கரத்தின் மேல் விழுந்து தமது கரங்களை மேலே உயர்த்தி, “தேவனே, என்மேல் இருக்கமாயிரும். நான் உம்மை சேவிப்பேன், தேவனே” என்று அலறிக் கூச்சலிட்டார். அங்கே நான் என்னுடைய கரங்களை அவரைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, அவரை மறுபடியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் வழிநடத்தினேன்.

82. இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்பு, நான் ஃபுளோரிடாவில் இருந்தேன். அப்போது யாரோ ஒருவர், “பில்லி...” என்று உரக்க கத்துவதைக் கேட்டேன். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். அது... ஆக இருந்தது. நான் எப்போதுமே அவரை... என்று அழைத்தேன். நாங்கள் சற்று, அல்லது ஒன்றாக வேலை செய்தோம், அப்போது நாங்கள் அவரை, “ஐயா, ஜான் அவர்களே” என்று அழைப்போம்.

நான் சொன்னேன்... [ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்]... அங்கே அஞ்சல் அலுவலகத்துக்கு அருகிலுள்ள தெரு பக்கமாக போன போது, பிரேக் போட்டு காரை நிறுத்தினேன் (pull in). அவர் இப்பொழுது அங்கே தான் வசித்து வருகிறார்.

எனவே நாங்கள் மேலே அந்த வீட்டிற்குச் சென்றோம்... இப்பொழுது, அது எவ்வளவு பரிபூரணமாயிருக்கிறது என்பதை நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன்.

இப்பொழுது, அந்தக் குழந்தையை எனது கரங்களில் தருவதற்கு முன்பாக, அந்தச் சிறு தாயார் இவ்விதமாக அந்தச் சுவரின் மேல் சாய்ந்து கொண்டிருக்கிற ஒரு காட்சியை நான் அந்தத் தரிசனத்தில் கண்டேன். மேலும் ஒரு வயதான சீமாட்டி... இப்பொழுது, அங்கே அந்த அறையில் ஒரு சிவப்பு நிற duofold சூட்டை அணிந்தவரும் கூட உட்கார்ந்து கொண்டிருந்தார். அந்த வாசலிலிருந்து, அந்த வழியாக ஒரு வயதான சீமாட்டி உள்ளே வந்து, தங்களுடைய மூக்கு கண்ணாடியைத் துடைத்துக் கொண்டே இந்தப் பக்கத்திலிருந்த இந்த நாற்காலியில் அமருகிறார்கள். மேலும் இதோ duofold ஆடையை அணிந்து கொண்டிருக்கிற ஒரு வாலிபர், இளம் பொன்னிற மலைமயிரை உடைய வாலிப மனிதர் உட்கார்ந்து கொண்டிருந்தார், அவர்கள் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

83. எனவே நான் உள்ளே நடந்து சென்ற போது... நிச்சயமாகவே அப்போது அதைக் குறித்து தெரியாதிருந்தது, எப்படி அதைச் செய்வது என்றோ, அல்லது அது என்னவென்றும், எனக்குத் தெரியாது, ஏனென்றால் அது என்னவென்று நான் அறியாதிருந்தேன். இவ்வாறாக அந்த அறைக்குள் நான் நடந்து சென்றேன்; நான் அங்கே உள்ளே போகையில், நான் உற்றுப் பார்த்தேன், அங்கே அந்தச் சிறு பையன் படுத்த படுக்கையாய் கிடந்தான், மேலும் இங்கே இந்தக் காரியத்தை அவனுடைய மூக்கின் மேல் வைத்திருக்க, உங்களுக்குத் தெரியும், ஒரு தாயார் முயற்சித்துக் கொண்டும், அழுது கொண்டும், அவ்வாறு செய்த வண்ணம் இருந்தாள். அவன் பிழைப்பதே கஷ்டமாயிருந்தது.

அந்தத் தரிசனம் எப்படி இருந்ததோ அப்படியே அதைக் கண்டேன். நிம்மோனியா அவனை முழுவதுமாக மூச்சுத் திணறச் செய்திருந்தது, ஆனால் இதோ அவன் (இவ்வாறு தான்) (சுவாசித்துக்) கொண்டிருந்தான் [சகோதரன் பிரன்ஹாம் அந்தச்

சத்தத்தை விளக்கிக் காண்பிக்கிறார் - ஆசிரியர்.] அவன் சின்னஞ்சிறிய பையனாக இருந்தான்... பழுப்பு நிற தலைமயிரை உடைய, வெறுமனே ஒரு சிறு பையனாக இருந்த அவனை நான் கண்டேன். நான், "திரு. எமில் அவர்களே, அவனை இங்கே கொண்டு வாரும், தேவனுடைய மகிமையை நீர் காண்பீர்" என்றேன்.

84. எனவே அந்தச் சிறு பையனை - (அந்த) மனிதர் அச்சிறு பையனை தம்முடைய கைகளால் தூக்கி, உணர்ச்சிவசப்பட்டவராய், ஓடோடி அவனை என்னிடம் கொண்டு வந்தார். நான் அங்கே எப்படி போனேன் என்பதைக் கவனியுங்கள். பாருங்கள்? நான் அருளப்பட்ட அணுகுமுறையில் வரவில்லை. புரிகிறதா? நான், "அவனை இங்கே கொண்டு வாரும்" என்றேன். நான் சுயநினைவைப் பெற்றேன், ஏனென்றால் அவனைச் சுகமடையச் செய்யப் போகிறதான தரிசனத்தை நான் கண்டிருந்தேன். ஆனால் நீங்கள் தேவனுடைய அணுகுமுறையில் வந்தாக வேண்டும். புரிகிறதா? அவர்கள் அவனை அங்கே கொண்டு வந்தனர். நான் அப்படியே என் கரங்களை அவன் மேல் வைத்து, "தேவனே, நீர் இந்தச் சிறு பையனை சுகப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். நீர் அதைச் செய்வதாகக் கூறினீரே" என்றேன். அந்தச் சிறு பையனோ மூன்று நான்கு தடவைகள் மூச்சுத் திணறி விட்டு முற்றிலும் சுயநினைவை இழந்து போனான்.

நான் அவனை உற்றுப் பார்த்தேன். அவனுடைய தாயார், "ஓ, அவன் மரித்து விட்டான், அவன் செத்துப் போய் விட்டானே, அவன் மரித்துப் போய் விட்டானே" என்று அலறிக் கூச்சலிடத் தொடங்கினாள்.

நான், "நல்லது, என்ன ஆனது? ஓ, என்னே, அதோ அது இருக்கிறது. ஓ, இதோ கிரஹாம் ஸ்நெல்லிங் இங்கே நின்று கொண்டிருக்கிறார்; இளம் பொன்னிற சுருள் முடியை உடையவராய் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தவர் நிச்சயமாக அவராகத்தான் இருக்க வேண்டும். ஆனால் இங்கே இந்த நாற்காலியில் ஒரு வயதான பெண்மணி கட்டாயம் உட்கார்ந்திருக்க

வேண்டுமே" என்று நினைத்தேன். அங்கே மரச்சாமான்களும் மற்றும் ஒவ்வொன்றுமே இருந்தன, ஆனால் அது சரியாக இல்லாதிருந்தது. நான் சரியான அணுகுமுறையில் வந்திருக்கவில்லை.

85. நிச்சயமாக அந்தப் பெண் தன்னுடைய கணவனின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கவில்லை. அவள் நிச்சயமாக அந்தக் கதவில் சாய்ந்து கொண்டிருக்க வேண்டியிருந்தது. நான், "ஓ தேவனே, நான் இந்தக் குழந்தையைக் கொன்று விட்டேன். நான்... ஓ, என்னே" என்று நினைத்தேன்.

தகப்பனார் குழந்தையை கீழே கிடத்தினார், அவள் அலறிக் கூச்சலிடத் தொடங்கி, அழுது கதறிக் கொண்டும், ஒவ்வொன்றையும் செய்து கொண்டும் இருந்தாள். நான் அப்படியே அங்கு நின்று கொண்டிருந்தேன். நான், "ஓ, என்னே. நான் என்ன செய்து விட்டேன்? என்ன செய்திருக்கிறேன்?" என்று நினைத்தேன். நான் அப்படியே சற்று நேரம் காத்திருந்தேன், ஓ, அந்த குழந்தை பிழைப்பதே கஷ்டமாயிருந்தது, இப்பொழுதோ அது இன்னும் மோசமாகி விட்டது.

நான், "ஓ, நான் அந்தக் குழந்தையைக் கொன்று போட்டிருப்பேன் என்றால், ஓ, ஆனால் நானாகவே அதைக் கொன்று போடவில்லை, ஆனால் அதற்கு காரணம் இருந்தது, நான் செய்யும்படி **அவர்** என்னிடம் சொன்னவைகளுக்கு நான் கீழ்ப்படிந்திருந்தால், ஆனால் நானோ அதை விட்டு விட்டேன்... அது உண்மை, மக்களே. இதோ இந்த வேதாகமத்திற்கு முன்பாக, அது சத்தியம் என்று பரலோகத்திலிருக்கிற தேவன் அறிவார்.

86. மேலும் நான் நினைத்தேன்... நல்லது இப்பொழுது, நான் நடந்து சென்று அங்கே உட்கார்ந்து கொண்டேன். அப்போது பகல் வெளிச்சம் வந்து விட்டது, நான் ஏறக்குறைய ஒரு மணி நேரமாக அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன். பகல் வெளிச்சம் வர, திரு. ஸ்நெல்லிங் அவர்கள், "நல்லது, நான் வேலைக்குப் போக வேண்டும்" என்று சொன்னார், அவர், "நான்..." என்றார்.

நான், “ஓ, என்னே. அவர்கள் அவரை அழைத்துச் சென்று விட்டால், அந்த ஒருவகை (சூட்டை) (duofold) அணிந்திருந்த இளம்பொன்னிற தலைமயிர் உடைய மனிதர் உட்கார்ந்து கொண்டிருந்தாரே... அவர் போய் விட்டால், தரிசனம் முழுவதும் பாழ்பட்டுப் போகுமே, நான்-நான் முழு காட்சியையும் கெடுத்துப் போட்டேனே” என்று நினைத்தேன். நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன், ஓ, நான் - என்னுடைய இருதயம் அப்படியே எனக்குள்ளே இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவர்கள் எதையோ என்னிடம் கூற, நான் அதற்கு பதில் பேசக் கூட இல்லை. நான் அப்படியே அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னால் அவர்களிடம் பேச முடியவில்லை, ஏனென்றால் தேவன் ஒருக்கால் ஏதாவது ஒரு வழியில் அதைச் சரிப்படுத்தி, அந்தக்காட்சியை மறுபடியுமாக சரியாக்கி விடுவார் என்று நினைத்தேன். எனவே நான் அப்படியே அங்கேயே உட்கார்ந்து கொண்டு, அப்படியே-அப்படியே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர்கள், “சகோதரன் பிரன்ஹாமே, நீர் மறுபடியும் குழந்தைக்காக ஜெபிக்க விரும்புகிறீரா?” என்று கேட்டனர்.

நான், “நன்றி” என்று கூறி விட்டு, உட்கார்ந்து கொண்டிருந்தேன்... நான், “ஓ, அந்த வயதான பெண்மணி எங்கே, ஓ...” என்று நினைத்தேன். இப்பொழுது... சகோதரன் கிரஹாம் போய் தம்முடைய கோட்டை அணிந்து கொண்டார்.

ஜான், “சகோதரன் பிரன்ஹாமே, நீர் எங்களோடு ஜெபர்ஸன்வில்லுக்கு திரும்ப வர விரும்புகிறீரா?” என்று கேட்டார்.

நான், “இல்லை, நன்றி” என்றேன். நான் அங்கேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. நான், “அது சென்ற இரவில் சம்பவித்திருக்கும், (ஆனால்) அந்த குழந்தையால் குணமடைய முடியவில்லை, அதனால் வேறொரு நேரத்தை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்பது எனக்குப் புரியவில்லை” என்று நினைத்தேன். பகல் வெளிச்சம் வந்து கொண்டிருந்தும், அது அங்கே அந்த

நிலையிலேயே இருந்தது. வழக்கமாக ஏறக்குறைய சூரியன் உதிக்கும் நேரத்தில், வியாதிப்பட்டுள்ள ஜனங்கள் எப்படியிருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நான், "ஓ, இதோ அது இருக்கிறது, என்னே, நான் என்ன செய்து விட்டேன்" என்று நினைத்தேன்.

87. முதலாவது காரியம் என்னவென்றால்... திரு. ஸ்நெல்லிங் தம்முடைய கோட்டை அணிந்து கொண்டு, வெளியே போகத் துவங்கினார். திரு. எமில் தம்முடைய மனைவியிடம், "நல்லது, போய் வருகிறேன், தேனே. நான் கிரஹாமை அழைத்துச் சென்று விட்ட உடன் திரும்பி வந்து விடுகிறேன், அப்பொழுது தான் அவரால் வேலைக்குப் போக முடியும்" என்றார். மேலும் கூறினார்... அவரும் அந்த ஆலைகளில் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தார்.

அவர், "நான்-நான் சற்று நேரத்தில் திரும்பி வந்து விடுகிறேன், நான் இன்று காலையில் வேலைக்குப் போகவில்லை" என்றார்.

அவள், "சரி, அன்பே" என்றாள்.

நான் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன்; நான், "ஓ..." என்று நினைத்தேன். அப்போது, நான் அந்த ஜன்னல் வழியாக வெளியே பார்க்க நேர்ந்தது, இதோ அந்தக் குழந்தையின் பாட்டி வந்து கொண்டிருந்தார்கள், தோள்பட்டை உடைய ஒரு சிறிய பை ஒன்றை தங்கள் கையில் பிடித்தபடி நடந்து வந்து கொண்டிருந்தார்கள், அவர்கள் ஒரு ஜோடி மூக்கு கண்ணாடியையும் கூட அணிந்திருந்தார்கள், அவர்களுடைய முடி நரைத்திருந்தது, அவர்கள் சுற்றி நடந்து சென்று, பின்பக்கத்திற்குள் போய் விட்டார்கள். இப்பொழுது, அவர்கள் எப்போதுமே முன்பக்க வாசல் வழியாகத்தான் வருவார்கள் என்று அவர்கள் முன்பு ஒவ்வொரு முறையும் சாட்சி கூறினார்கள். ஆனால் அவர்கள் உள்ளே வரும்படியாக பின்பக்கம் இருக்கும் சிறு சமையலறைக்கு சென்றார்கள்.

88. நான், "ஓ, அது அவர்கள் தான்; அதுதான் அந்த பெண்மணி" என்று நினைத்தேன். அது அந்தப் பிள்ளையின் பாட்டி என்று அப்போது எனக்குத் தெரியாது, ஆனால் அந்தத் தரிசனத்தில் இருந்த பெண்மணி அவர்கள் தான் என்று நான் அறிந்திருந்தேன். எனவே இதோ அவர்கள் சரியாக... நடந்து வந்து கொண்டிருந்தார்கள். நான், "இதோ அது. இதோ அது இருக்கிறது. தேவனுடைய கிருபை அதை ஜெயங்கொள்ளப் போகிறது" என்று நினைத்தேன். நான் என்னுடைய இருதயத்தில் அவ்வாறு நினைத்தேன், அது உங்களுக்குத் தெரியும், நான் அங்கே நின்று அந்த வயதான பெண்மணியைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

அவர்கள் சுற்றி வந்து, பின்பக்க வாசல் வழியாக உள்ளே போனார்கள். அவர்கள் கதவைத் திறந்த போது, நான், "அது யார்?" என்று கேட்டேன். சகோதரன் கிரஹாம் வாசலண்டையில் நின்று கொண்டிருந்தார், அவரும் திரு. எமில் அவர்களும் வெளியே போகப் போவதாயிருந்தனர்.

89. இந்நிலையில் அந்தத் தாயார் சமையலறையை காணும்படியாக சமையலறையின் வாசலை நோக்கிப் போனார்கள், மேலும் அந்த வயதான... வாலிப ஸ்திரீயாயிருந்த அந்தக் குழந்தையின் தாயார், அங்கே வெளியே நோக்கிப் பார்த்து, இங்கே - "ஓ, இது அம்மா" என்றாள். ஜானும் கிரஹாமும் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் அவ்வாறு செய்த போது, நான் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தை விட்டு எழுந்தேன், ஏனென்றால் கிரஹாம் கட்டாயம் அங்கே உட்கார்ந்து இருந்தாக வேண்டும்.

எனவே நான்-நான் எழும்பி, திரும்பிப் பார்த்தேன், அப்போது அந்த தாயார் வந்தார்கள். அவர்கள் (அந்தக் குழந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு), அவர்கள், "குழந்தைக்கு இன்னும் உயிர் இருக்கிறதா? அவன் சுகமடைந்து விட்டானா?" என்று கேட்டார்கள்.

90. மனைவி, "இல்லை, அம்மா, அது ஏறக்குறைய மரித்து விட்டது" என்று கூறி விட்டு, அவள் தன்னுடைய கரங்களை

சுவற்றின் மேல் வைத்துக்கொண்டு, இவ்விதமாக அழத் தொடங்கினாள், உங்களுக்குத் தெரியும், அப்படியே கதவில் அவ்விதமாக அடித்துக்கொண்டு, சத்தமாய் அழுது கொண்டே, தன்னுடைய தாயாரை முத்தமிட்டாள்.

அப்போது அந்த வயதான பெண்மணி... நான், "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று நினைத்தேன். அவர்களைக் கவனித்த போது, அவர்கள் போய், அந்த நாற்காலியில் உட்கார்ந்து, அந்த மூக்கு கண்ணாடியை எடுத்தார்கள், ஏனென்றால் அவர்கள் குளிர்ந்த சீதோஷ்ண நிலையிலிருந்து வந்திருந்தார்கள்... அந்தக் கண்ணாடியின் வெளிப்புறம் குளிரின் காரணமாக உறைபனி போன்று மங்கியிருந்தது (frosted), அவர்கள் தங்கள் மூக்கு கண்ணாடியைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள், நான், "பரிபூரணமாய் உள்ளது. சகோதரன் கிரஹாம் அப்படியே சென்று அதன் மேல் உட்காருவாரானால்" என்று நினைத்தேன். சகோதரன் கிரகாம் அவர்களுக்கு உறவினராக இருந்தார், அந்த வாலிப பெண் அழுது கொண்டிருந்த காரணத்தினால், அவரும் அழத் தொடங்கினார், அப்போது அவர் போய் அதே இடத்தில் உட்கார்ந்து கொண்டார். ஓ, என்னே.

91. இப்பொழுது, அது சரியாக இருக்கிறது. நான் அங்கே நின்று கொண்டு, "திரு. எமில் அவர்களே, நீர் என்னை மன்னிப்பீரா?" என்று கேட்டேன்.

அவர், "ஏன்?" என்று கேட்டார்.

நான், "உமக்கு இன்னும் நம்பிக்கை உள்ளதா?" என்று கேட்டேன்.

அவர், "ஆமாம், பில்லி, ஏன்?" என்றார்.

நான், "நான் சற்று முன்பு, ஒழுங்குக்கு அப்பாற்பட்டு பேசி விட்டேன். நான் வருந்துகிறேன், நான் தேவனுக்கு முன்பாக மனஸ்தாபப்படுகிறேன். ஆகையால் தான் நான் இந்த இரண்டு மணி அல்லது அதற்கும் அதிக நேரமாக ஒன்றும் பேசவில்லை. நான் தரிசனத்திற்காக காத்திருக்கவில்லை. சகோதரன் கிரஹாம்

எழுந்து விட்டார், அல்லது… எனக்கு வெளிப்பட்டது என்னவென்றால்" என்றேன்.

அவர், "நல்லது, என்ன, என்ன சொல்லுகிறீர்?" என்றார்.

நான், "எல்லாம் ஒழுங்கில் உள்ளது. உமக்கு இன்னும் என்மேல் நம்பிக்கை இருக்குமானால், இப்பொழுது அந்தக் குழந்தையை இங்கே கொண்டு வாரும்" என்றேன்.

அந்த தகப்பன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அங்கே நடந்து வந்தார். நான், "பரலோகப் பிதாவே, என்னுடைய முட்டாள்தனத்தையும், என்னுடைய தவற்றையும் எனக்கு மன்னித்தருளும். இப்பொழுது, நீர் செய்வீரென்று நீர் சொன்னதை நிறைவேற்றும்" என்றேன்.

பின்பு, என்னுடைய கரங்களை அந்தக் குழந்தையின் மேல் வைத்தேன். உடனே, அது தன்னுடைய கரங்களை தனது அப்பாவுடைய கழுத்தைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, "அப்பா, அப்பா, அப்பா" என்றது.

92. எல்லாரும் சத்தமாக கூச்சலிடத் தொடங்கினர். அங்கே மேலே அந்த மலைப்பாகத்தில் இரட்சணிய சேனை சபையார் அவர்களிடம் வந்திருப்பார்கள் என்று அவர்கள் நினைத்தனர். அதன்பிறகு அந்தச் சிறு குழந்தை… ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு-பிறகு, நான், "இப்பொழுது, நாம் போகலாம்" என்று கூறினேன்.

அவர், "சகோதரன் பில் அவர்களே, என்னுடைய குழந்தை சுகமாகி விட்டதா?" என்று கேட்டார்.

நான், "எனக்குக் காண்பிக்கப்பட்டபடி, குழந்தை அந்த மூலையை விட்டு வெளியே வந்து, அது மூன்று முறை சுழன்றது, ஒருமுறை இந்தக் காலைக் கொண்டு இந்தவிதமாக சுழன்று திரும்பியது. ஒரு முறை இந்தக் காலின் மேல் திரும்ப இந்த விதமாகவும் சுழன்று திரும்பியது, அதன்பிறகு அதனுடைய சரீரம் நேரானது," என்றேன், மூன்று கட்டங்களாக இருந்தது மூன்று

நாட்களைக் குறிக்கிறது. நான், "எனக்குச் சொல்லப்பட்டபடியே, மூன்று நாட்களில், இந்தக் குழந்தை குணமடைந்து சுகமாகி விடும்" என்றேன்.

93. எனவே அவர்கள் அவனை மறுபடியும் படுக்கையில் படுக்க வைத்தனர், அவனோ தன்னுடைய அப்பாவிடம் பேசிக் கொண்டிருந்தான், அதற்கு முன்பு அவனுக்கு மூச்சு விடுவது கூட கஷ்டமாயிருந்தது. நாங்கள் சென்று காரில் ஏறி, வீட்டுக்குச் சென்றோம். புதன்கிழமை இரவில் நான் அதைச் சபையில் கூறினேன். நான், "நாளை மறுநாள் அல்லது நாளை இரவில் எத்தனை பேர் மேலே வந்து, நான் அந்தக் கதவண்டை போகும்போது கவனித்து, அந்தச் சிறு குழந்தை... ஆகிறதா என்று பார்க்க விரும்புகிறீர்கள் என்று கேட்டேன். இப்பொழுது மேலேயுள்ள அந்த வீட்டாருக்கு அதைக் குறித்து எதுவும் தெரியாதிருந்தது; அந்தச் சிறு குழந்தை என்னிடம் வந்து, அதனுடைய கரங்களை என்மேல் வைத்து, 'சகோதரன் பில், நான் பூரணமாய் சுகமடைந்து விட்டேன்' என்று கூறாமல் இருக்கிறதா என்றும், அப்போது அதனுடைய வாயின் மேல் பால் இருக்கிறதா என்றும் பாருங்கள்" என்றேன். நான், "அது அவ்வாறு செய்யாமல் போகிறதா என்று பாருங்கள்" என்றேன். புரிகிறதா? ஒரு டிரக் (திறந்த சரக்கு வண்டி - தமிழாக்கியோன்) நிறைய பேர் அங்கே மேலே சென்றோம்.

94. அவர்கள் அந்த ஜன்னல்களைச் சுற்றிலும் கூட்டமாகக் கூடியிருந்தனர். பிறகு நான் டிரக்கை விட்டு இறங்கி, அங்கு சென்று, கதவைத் தட்டினேன், அவர்கள் வெறுமனே ஏழை ஜனங்களாக இருந்தனர், அவர்களுக்கு தரைவிரிப்பும் இல்லாதிருந்தது...?... நான் அதைத் தாண்டிச் செல்லத் தொடங்கினேன், அந்தப் பிள்ளைகள் - அந்தப் பிள்ளை பக்கத்து வீட்டிலிருந்து காணும்படி மேலே வந்திருந்த வேறொரு சிறு பெண் பிள்ளையோடு தரையில் விளையாடிக் கொண்டிருந்தது. நான் கதவைத் தட்டின போது, இப்பொழுது என்னுடைய மனைவியாயிருக்கிற மேடா... நாங்கள் அப்பொழுது விவாகம்

பண்ணியிருக்கவில்லை. அவள் எனக்கு அருகில் நின்று கொண்டிருந்தாள், மூன்று அல்லது நான்கு பேர் எனக்கு அருகாமையில் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது திருமதி. எமில், "ஓ, இது சகோதரன் பில் அவர்கள். உள்ளே வாருங்கள், சகோதரன் பில். நான் உமக்கு ஒரு காரியத்தைக் காண்பிக்க விரும்புகிறேன்" என்றாள்.

95. நான் இவ்விதமாக அவர்களை நோக்கிப் பார்த்தேன். நாங்கள் அந்த அறைக்குள் நடந்து சென்றோம். நாங்கள் அங்கே நின்று கொண்டிருந்த போது, விளையாடுவதற்கான கட்டித் துண்டுகளில் (blocks) சிலவற்றை அந்த மூலையில் வைத்து விளையாடிக் கொண்டிருந்த அந்தச் சிறு பையன் எழுந்து என்னை நோக்கிப் பார்த்தான், அவன் பால் குடித்திருந்த காரணத்தினால், அவனுடைய வாயின் குறுக்கே சின்னதாக மீசை இருந்தது, அவன் நடந்து வந்து, என்னுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு, "சகோதரன் பில், நான் இப்பொழுது பூரணமாக சுகமடைந்து விட்டேன்" என்றான். அது என்ன? அவன் மூன்று நாட்களாக, எல் ஷடாயின் மேல், தேவனுடைய தெய்வீக வாக்குத்தத்தத்தின் மேல் பால் அருந்திக் கொண்டிருந்தான், தேவனுடைய தெய்வீக அணுகுமுறைக்கு வருதல். அவனுக்கு ஒரு அணுகுமுறை இருந்தது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நாம் ஜெபிப்போம்.

பரலோகப் பிதாவே, நாங்கள் இன்று உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஓ, அந்த தெய்வீக அணுகுமுறை இன்னும் எங்களுக்கு இருக்கிறதின் நிமித்தமாக எங்களுடைய இருதயம் எவ்வளவாய் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. இங்கே வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு விவரமும், தெளிவான சான்றும் சரியாக இப்பொழுதே எங்களுக்கு இருக்கின்றன, எங்களுக்குத் தேவையான ஒவ்வொன்றையும் அருளுகிற எல்லாவற்றிற்கும் போதுமான தேவன் எங்களுக்குண்டு. தேவனே, இன்று நான் முழுவதும் உச்ச உயர்வான முதன்மை பலியினூடாக இப்பொழுதே அணுகுகிறேன். நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் நிழலாய் இருக்கிறது, யோபு அந்த நிழலினூடாக

வந்தது போல, அந்த சர்வாங்க தகன பலிகள் வெறுமனே ஒரு நிழலாகவே இருக்கின்றன... ஆனால் அவைகளின் பொருளாயிராமல், இருப்பதால், அவைகளைச் செலுத்த வருகிறவனை ஒருக்காலும் பூரணப்படுத்த மாட்டாது. ஆனால் இந்த மனிதராகிய கிறிஸ்து எல்லாவற்றிற்காகவும் ஒருவிசை மரித்து என்றென்றுமாய் அதைத் தீர்த்து விட்டார். தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக தம்மை அணுகுவதற்கு தேவனிடம் ஒரேயொரு அணுகுமுறை தான் இருக்கிறது, அதுதான் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாக.

பரிசுத்த ஆவியானவர் கெஞ்சிக் கொண்டிருப்பதால், நான் இன்றைக்கு இதைக் வேண்டிக் கொள்கிறேன், தெய்வீக பிரசன்னத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் இந்தப் பாதை திறந்தே உள்ளது. இதை அருளும், கர்த்தாவே. இரவு வந்து கொண்டிருக்கிறது, சுகமளிக்கிற ஆராதனையும் வந்து கொண்டிருக்கிறது.

96. மேலும், பிதாவே, சற்று முன்பு, மூர்க்கத்தனம் கொண்டவர்களாயும், அலட்சியம் பண்ணுகிறவர்களாயும் இருந்து, உம்மை அறியாமலும், எப்படி வருவதென்று தெரியாமலும் யாராவது இங்கே இருந்து, ஒருக்கால் அவர்கள் (அப்படியே) தொடர்ந்து போய்க் கொண்டிருந்து, உண்மையாகவே வந்து மறுபடியும் பிறக்க ஒருபோதும் முயற்சி செய்யாமலும் இருந்து, அதற்குப் பிறகு உம்மை அணுகி வந்திருக்கலாம். அவர்கள் புறம்பாக உம்மை அணுக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாமே சரியாக இப்பொழுதே கிறிஸ்துவினூடாக வருவார்களாக, எங்கள் மீறுதல்களினிமித்தம் காயப்பட்ட எல்ஷடாயின் மார்புக்கு அவர்கள் வருவார்களாக. பிறகு இன்றிரவு அவர்கள் திரும்பி வருகையில், தாயாகிய தேவனின் மார்பின் மேல் தங்கள் தலையை சாய்த்துக் கொள்வார்களாக. எங்களைச் சரியாக பிறப்பிக்கக்கூடிய ஒரே ஒருவர் தேவனே, அவரே எங்கள் தாயும் தகப்பனுமாகவும், எங்கள்-எங்கள் மீட்பராகவும், எங்கள் அன்பார்ந்தவராகவும், ஓ, எல்லாவற்றுக்கும் எல்லாமாகவும் இருக்கிறார். தேவனே சரியாக இப்பொழுதே அதை அருளும்.

இசையானது இனிமையோடு இசைக்கப்படுகையில். மூர்க்கத்தனமுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும் சரியாக இப்பொழுதே தேவனுடைய பரதீசின் வாசல் நுழைவாயிலுக்கு வந்து, "தேவனே, பாவியாகிய" அல்லது பின்வாங்கிப் போனவனாகிய, "என்மேல் சரியாக இப்பொழுதே இரக்கமாயிரும், கர்த்தராகிய இயேசுவின் வழியாக உம்முடைய அருளப்பட்ட வழியில் நான் வருகிறேன். பிதாவே, என்னை ஏற்றுக்கொள்ளும்" என்று கூறுவார்களாக.

97. நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், ஒன்று, இரண்டு, கட்டிடத்தில் எங்காவது எத்தனை பேர் உங்கள் கரத்தை மேலே உயர்த்தி, "சகோதரன் பிரன்ஹாமே, நான் சற்றே காலம் கடத்திக் கொண்டும், ஒருவிதத்தில் துள்ளிக்குதித்து தாறுமாறாக போய்க் கொண்டும், ஏதோவொரு வித அனுபவத்தின் வழியாக தேவனிடம் வந்து விடலாம் என்று நம்பிக் கொண்டும், அல்லது ஒருக்கால் எனக்கு ஒரு உணர்ச்சியிருந்த காரணத்தினாலும், வெளிச்சங்களை அல்லது... கண்டதின் நிமித்தமாகவும் அவ்வாறு நம்பிக் கொண்டிருக்கிறேன். ஆனால் சரியாக இப்பொழுதே அவைகள் எல்லாவற்றையும் ஒருபக்கமாகத் தள்ளி விடுகிறேன். நான் தேவனுடைய வழிக்கு வருகிறேன். நான் சரியாக இப்பொழுதே சிலுவை பாதையின் மூலமாக வந்து கொண்டிருக்கிறேன். நான் சர்வ வல்லமையுள்ள தேவனை நோக்கி என்னுடைய கரத்தை உயர்த்துகிறேன், தேவனே, என்மேல் இரக்கமாயிரும்" என்று கூறுகிறவர்கள் இருக்கிறார்களா என்று வியப்படைகிறேன். தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. தேவன் உம்மை, உம்மை, உம்மை, உம்மை ஆசீர்வதிப்பாராக. தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. தொடர்ந்து எல்லாவிடங்களிலும் ஜெபித்துக் கொண்டிருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உம்மை, உம்மை ஆசீர்வதிப்பாராக. ஓ, என்னே.

மேலே பால்கனியிலும், அங்கே மேலே எங்காவது இருக்கிற யாராவது ஒருவர், "சகோதரன் பிரன்ஹாமே, சரியாக இப்பொழுதே, நான் விசுவாசத்தினாலே, மேலேயுள்ள கதவண்டை போகிறேன்.

நான் அதைக் காண்கிறேன். என்னுடைய எந்த வழிகளிலும் அதைச் செய்ய முடியாது என்பதை நான் புரிந்து கொள்கிறேன். என்னுடைய சொந்த எண்ணங்கள் நல்லவைகளே அல்ல. தெய்வீக சுகமளித்தலைக் குறித்த என்னுடைய சொந்த எண்ணங்கள் நலமானதல்ல. நான் இரும்புச் சுவரின் மேல் மோத முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். நான் அதிகமாக வந்து, அதிகமாக மோதும் தோறும், நான் மோசமடைந்து கொண்டு தான் இருக்கிறேன். சகோதரன் பிரன்ஹாமே, என்னால் எந்த இடத்தையும் அடைய முடியவில்லை. எனவே நீர் சற்று முன்பு கூறினவைகளை நான் ஏற்றுக்கொள்ளப் போகிறேன். தேவனால் அருளப்பட்ட வழிக்கு நான் வந்து கொண்டிருக்கிறேன். நான் அப்படியே எளிமையாகவும், என்னைச் சுற்றிலுமுள்ள சுற்றுச்சூழல்கள் எதற்கும் சுயநினைவற்றவனானவும் வந்து கொண்டிருக்கிறேன். நான் சிலுவையின் பாதையின் மூலமாக, கர்த்தராகிய இயேசுவிடம் வந்து, அவரை பலமுள்ளவராகவும், எல்ஷடாயாகவும் ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறுங்கள்.

தகப்பனாரே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. வயேதிப, தலைநரைத்த மனிதர் தம்முடைய கரத்தை மேலே உயர்த்தினவராய், தளர்ந்து போய் நடுங்கிக் கொண்டிருக்கும் அவர் நினைவுகூரப்பட விரும்புகிறார். நாம் ஜெபிப்போம்.

98. கர்த்தராகிய இயேசுவே, இவர்களை நோக்கிப் பாரும், சுற்றிலும் 12 அல்லது அதற்கும் அதிகமான கரங்கள் உள்ளன. ஒருக்கால் இரண்டு டஜன் பேர் தங்கள் கரத்தை உயர்த்தியிருக்கலாம். வயதான சிலரும், இடத்திற்கு இடம் அலைந்து திரிந்த பரிதாபமான சகோதரர்களும், அவர்கள் ஒருக்கால் சபையைச் சேர்ந்திருக்கலாம் அல்லது நன்மையானதைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கலாம். பிதாவே, அவை எல்லாம் அருமையானது தான். அவர்கள் சபைக்குச் சென்று, சபையில் தங்கள் பெயரை பதிவு செய்த போது நீர் அவர்களைக் கண்டீர். பிதாவே, அவர்கள் ஜனங்களுக்கு தங்கள் பொருளைக் கொடுத்ததையும், விதவைகளைப் போஷித்ததையும், ஏழைகளுக்கும் எதுவுமற்ற வயதான பெண்மணிகளுக்கும்

நிலக்கரியை வண்டியில் எடுத்துச் சென்றதையும், பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு மரம் வெட்டிக் கொடுத்ததையும், வெளியே சாலை ஓரத்தில் இருந்த அந்த மனிதனுக்கு அவர்கள் உதவி செய்ததையும், தங்கள் சகோதரன் மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைத்ததினிமித்தமாக அனுமதி சீட்டுக்காக போலீசுக்கு கொடுப்பதை தடுத்து அந்த நிக்கல் காசுகளை கொடுத்ததையும், போன்ற அந்த நற்செயல்களை அவர்கள் செய்த போது, அவர்களை நீர் கண்டீர். ஒருக்கால் அந்த மனிதனை அவர்கள் ஒருபோதும் கண்டிராதவர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் கடந்து போகையில், அந்த மனிதனுக்காக வருந்தினார்கள். அது நல்லது தான். கர்த்தாவே, நீர் அதைக் கண்டீர். அதற்காக நீர் அவர்களை நேசிக்கிறீர், இப்பொழுது நீர் அவர்களுடைய இருதயத்தில் பேசியிருக்கிறீர். அவர்கள் இப்பொழுது உம்முடைய அருளப்பட்ட பாதை வழியாக வர விரும்புகிறார்கள், அவர்கள் செய்திருக்கிறவைகளைக் கொண்டல்ல, ஆனால் தங்களுடைய சொந்த விருப்பங்களை உம்மிடம் ஒப்புவிப்பதின் மூலமாக, உம்மை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறார்கள். பிதாவே, நீர் சரியாக இப்பொழுதே அவர்களை ஏற்றுக்கொள்ளும். நாங்கள் இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம்.

99. உங்கள் தலைகள் வணங்கியிருக்க, நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கையில், உங்களுக்கு விருப்பமானால், சகோதரன் ஜோசப் அவர்கள் வந்து, பீட அழைப்பை முடித்து வைப்பாரா என்று கேட்டுக்கொள்ளப் போகிறேன், நான் அமைதியாக ஜெபிக்கச் செல்கையில், சுகமளிக்கிற ஆராதனைக்கு ஆயத்தமாகி விடுங்கள்.

இசை இசைக்கப்பட்டு, நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கையில், தங்கள் கரத்தை உயர்த்தின ஒவ்வொருவரும் இங்கே வந்து, தனிப்பட்ட விதத்தில் கர்த்தராகிய இயேசுவிடம் ஜெபிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இன்றிரவு நான் உங்களைக் காண்பது மட்டுமாக தேவன் உங்களோடு இருப்பாராக.

## எமது வெளியீடுகள்:

1. தேவதூதன்
2. ஓர் கலியாண விருந்து
3. பயன்படுத்தப்பட்ட ஓர் சால்வை
4. சபை ஒழுங்கு
5. கிறிஸ்துவின் ஊழியம்
6. விசுவாசமுள்ளவனாயிரு
7. சிமியோன்
8. அவர் உங்களை விசாரிக்கிறவர்
9. தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்
10. வார்த்தையின் அதிகாரத்தில் இயேசு
11. எபிரெயர் அதிகாரம் - 6, பாகம் - 2
12. ஆயத்தம்
13. மகத்தான யுத்தவீரனாகிய யோசுவா
14. கர்த்தரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தரிசனம்
15. ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது?
16. கிருபைக்குப் பதிலாக நியாயப்பிரமாணத்தை சபை தெரிந்து கொள்ளுதல்
17. ஈஸ்டர் சூரிய உதயம்
18. இராப்போஜனம் (1963)
19. என்னைப் பின்பற்றி வா (1963)
20. பிசாசின் வல்லமை
21. சுய சரிதை
22. இந்த மலையைப் பார்த்துப் பேசு
23. தாய்மார்களின் தினம்
24. சாட்சி
25. யூகித்தல்
26. தேவனுடைய கண்
27. ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை
28. இயேசுவும் சபிக்கப்பட்ட லேகியோனும்

*29.* மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும், பாகம் -1
*30.* உன் வீட்டார்
*31.* மோசே
*32.* யவீரு
*33.* நான் என் வழியைச் சிந்தித்துக்கொண்டு
*34.* வியாதிகளும் துன்பங்களும்
*35.* தீர்க்கதரிசியாகிய எலிசா
*36.* எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது
*37.* பேழை
*38.* தீர்மானத்தின் நேரம்
*39.* ஜெபவரிசை
*40.* ஐக்கியம்
*41.* விசுவாசிக்க மாத்திரம் செய்
*42.* தனிப்பட்ட பேட்டி
*43.* திடீரென்று சபையானது இரகசியமாக மறைந்து போகுதல்
*44.* வேளை வந்தது
*45.* வில்லியம் பிரன்ஹாம் அவர்களின் தரிசனங்கள்
*46.* வார்த்தை மாம்சமானது (இந்திய பிரயாணம்)
*47.* ஞானஸ்நான ஆராதனை
*48.* விசுவாசம் (ஆப்பிரிக்க பயண அறிக்கை)
*49.* வெளிப்படுத்துதல்கள்
*50.* கேதரா தேசத்து வெறிபிடித்த மனிதன்
*51.* ஆபிரகாம்
*52.* தேவனை அணுகும்விதம்

## அடுத்த வெளியீடுகள்:

1. மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும் – பாகம் 1 (61-0216 The Mark Of The Beast And The Seal Of God 1)
2. மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும் – பாகம் 2 (61-0217 The Mark Of The Beast And The Seal Of God 2)
3. நம்முடைய ஜீவனுள்ள நாளெல்லாம் (59-0612 All The Days Of Our Life)

4. தூதனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியுங்கள் (50-0713 Obey The Voice Of The Angel)
5. ஓர் அதிகாரச் சின்னம் (62-0119 An Ensign)
6. நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும் (61-1231M You Must Be Born Again)
7. தேவனை விசுவாசித்தல் (52-0224 Believing God)
8. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகம் (56-0603 The Lambs Book Of Life)
9. வரப்போகிற மகத்தான எழுப்புதலும் பரிசுத்த ஆவியானவரின் ஊற்றுப்படுதலும் (54-0718A The Great Coming Revival And The Outpouring Of The Holy Spirit)
10. அவிசுவாசத்திலிருந்து வேறுபிரிதல் (55-0228 Separation From Unbelief)
11. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியின் ஸ்தானம் (55-0227A The Position Of A Believer In Christ)
12. கிறிஸ்து (55-0221 Christ)
13. தரித்து நில்லுங்கள் (57-0518 Stand Still)
14. ஒரு வழியை உண்டாக்குதல் (56-0304 Making A Way)
15. மகிமைப்படுத்தப்பட்ட இயேசு (55-0225 Glorified Jesus)
16. வைத்தியனாகிய மோசே (55-0114 Doctor Moses)
17. தெய்வீக சுகமளித்தல் (54-1219M Divine Healing)
18. கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது (50-0822 Faith Without Works Is Dead)
19. எலியா (53-1018 Elijah)
20. உடன்படிக்கையின் தூதன் (54-0301 The Angel Of The Covenant)
21. ஊழிய பிரதிஷ்டை (62-1104E Ordination)
22. நான் செய்கிற கிரியைகள் என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறது (51-0413 The Works That I Do Bear Witness Of Me)
23. பெந்தெகோஸ்தே எங்கே தோல்வியடைந்தது என்று நான் எண்ணுவது (55-1111 Where I Think Pentecost Failed)
24. போய் சொல்லுங்கள் (60-0417M Go Tell) – (செய்தியில்லாமல் ஓடுதல்)

25. தேவனுடைய வெகுமதியை ஏற்றுக்கொள்ளுங்கள் (53-0219 Accept Gods Gift)
26. மறக்கப்பட்ட மலைப்பிரசங்கம் (61-0425E The Forgotten Beatitude)
27. அவனிமித்தமாக ஏற்றுக்கொள்வேன் (52-0718 For Him Will I Accept)
28. அவிசுவாசம் தேவனைத் தடை செய்வதில்லை (62-0128M Unbelief Does Not Hinder God)
29. அந்நிய பாஷையின் பேரில் விவாதம் (60-0807 Debate On Tongues)

தொடர்புக்கு:

**E- Mail : jebakumarsa@gmail.com**
**www.thefinish.in**